பக்கங்கள் : எட்டு

Registered as a Newspaper

# உதயன்

விலை ரூபா 10.00

www.uthayan.com

சுடர் 22 வள்ளுவர் ஆண்டு 2038 ஆடி 9 வியாழக்கிழமை (26.07.2007) UTHAYAN-A Lively National Tamil Daily கதிர் : 239

# பிரிட்டனின் 4 தடுப்பு முகாம்களில் உள்ள ஈழத் தமிழர் சாகும்வரை உண்ணாவிரதம்!

## இலங்கைக்கு திருப்பி அனுப்பும் முடிவை ஆட்சேபித்து

லண்டனில் இருந்து குமரன்

லண்டன், ஜூலை 26

**இலங்கைக்குத் திருப்பி அனுப்பப்படுவதற்கென, இங்குள்ள நான்கு தடுப்பு முகாம்களில் வைக்கப்பட்டுள்ள, அறுபதுக்கும் மேற்பட்ட ஈழத் தமிழர்கள், பிரிட்டிஷ் அரசின் முடிவை ஆட்சேபித்து சாகும்வரை உண்ணாவிரதத்தில் ஈடுபட்டுள்ளனர்.**

**இவர்களில், ஹார்மன்பேர்த் தடுப்பு முகாமில் உள்ள 29 பேர் கடந்த 21ஆம் திகதி சனிக்கிழமை தொடக்கம் உண்ணாவிரதம் அனுஷ்டித்துவருகின்றனர். ஏனைய மூன்று முகாம்களைச் சேர்ந்த முப்பதுக்கும் மேற்பட்டவர்கள் நேற்றுத் தமது சாகும்வரை உண்ணாவிரதத்தை ஆரம்பித்தனர்.**

பிரிட்டனில் அகதி அந்தஸ்துக்கு விண்ணப்பித்து, அது நிராகரிக்கப்பட்டவர்கள், சொந்த நாட்டுக்கு அனுப்பப்படுவதற்கென தடுப்பு முகாம்களில் வைக்கப்படுவதே நடைமுறையாகும். தடுப்பு முகாம்களில் தங்க வைக்கப்படுவோர் திருப்ப அனுப்பப்பட விருக்கும் திகதி இரண்டொரு நாள்களுக்கு முன்னரே அவர்களுக்குத் தெரி

(08 ஆம் பக்கம் பார்க்க)

## பூநகரியில் நேற்று 'கிபிர்' குண்டுவீச்சு

கிளிநொச்சி, ஜூலை 26

பூநகரிப் பகுதியை நேற்று மாலை 4 மணியளவில் வட்டமிட்ட கிபிர் விமானங்கள் இரண்டு தடவைகள் குண்டு வீச்சு நடத்தின.

குண்டு வீச்சுகளின் போது ஏற்பட்ட சேதம் குறித்து தகவல் வெளியாகவில்லை.

கிபிர் விமானங்கள் சாவகச்சேரி, யாழ்ப்பாண வான் பரப்பின் ஊடாகவே சென்று தாக்குதலை நடத்தின. (அ-1-207)

**உள்ளே**

க.பொ.த. உயர் தரப் பரீட்சைக்குத் தோற்றும் மாணவர்களுக்கான தமிழ், அரசியல் பாடங்களுக்குரிய மாதிரி வினாத்தாள்கள் 5ஆம் பக்கத்தில்...

## வெள்ளவத்தை கடையில் ஆயுததாரிகள் கொள்ளை

கொழும்பு, ஜூலை 26

வெள்ளவத்தைப் பகுதியில் உள்ள நாணய மாற்று வர்த்தக நிலையம் ஒன்றுக்குள் நேற்று இரவு 7 மணியளவில் புகுந்த ஆயுததாரிகள் அங்கு துப்பாக்கிச் சூடு நடத்திவிட்டு ஒரு தொகைப் பணத்தைக் கொள்ளையடித்துச் சென்றுள்ளனர்.

இந்தச் சம்பவத்தில் குறித்த கடையின் காசாளர் சூட்டுக்கு இலக்காகி காயமடைந்தார். பல லட்சக்கணக்கான ரூபா பணம் கொள்ளையடித்துச் செல்லப்பட்டிருப்பதாக தெரிவிக்கப்பட்டது.

## மோசடி வழக்கில் சம்பந்தப்பட்ட நபரை யாழ்.அழைத்துவர பயண அனுமதி வழங்கவும்

### கோத்தபாய ராஜபக்ஷவுக்கு யாழ்.நீதிமன்றம் உத்தரவு

யாழ்ப்பாணம்,ஜூலை 26

பல்வேறு மோசடி வழக்குகளில் சம்பந்தப்பட்ட நபரை யாழ்.நீதிமன்றத்தில் ஆஜர் செய்ய பாதுகாப்பு அனுமதி வழங்குமாறு பாதுகாப்பு அமைச்சின் செயலாளர் கோத்தபாய ராஜபக்ஷவுக்கு யாழ்.நீதிமன்றம் உத்தரவிட்டுள்ளது.

யாழ்ப்பாணம், கிளிநொச்சி, மட்டக்களப்பு, கொழும்பு ஆகிய பிரதேசங்களில் வங்கிகளில் வேலை வாய்ப்புப் பெற்றுத் தருவதாகவும் வெளிநாட்டு வேலை வாய்ப்புப் பெற்றுத் தருவதாகவும் பல லட்சம் ரூபாவை மோசடி செய்ததாக திருநெல்வேலியைச் சேர்ந்த நபர் ஒருவர் கொழும்பில் கைது செய்யப்பட்டுள்ளார்.

அவர் வெலிக்கடைச் சிறைச் சாலையில் தடுத்து வைக்கப்பட்டுள்ளார்.

(08 ஆம் பக்கம் பார்க்க)

## நேற்றைய பணிப் புறக்கணிப்பால் மக்களின் இயல்பு வாழ்க்கை பாதிப்பு

யாழ்ப்பாணம், ஜூலை 26

மூதூர் கிழக்கை அதி உயர் பாதுகாப்பு வலயமாக அரசு பிரகடனப்படுத்தியிருப்பதற்கு எதிர்ப்பை வெளிப்படுத்து முகமாக நேற்று குடாநாட்டில் இடம்பெற்ற பணிப்புறக்கணிப்புக் காரணமாக மக்களின் இயல்பு வாழ்வு கணிசமாகப் பாதிக்கப்பட்டிருந்தது.

நகரிலும், புறநகரப் பகுதியிலும் வர்த்தக நிறுவனங்கள் காலையில் மூடப்பட்டிருந்தன. போக்குவரத்துச் சபை, தனியார் பஸ் சேவைகள் காலையில் குறைவாகவே காணப்பட்டன.

அதன் காரணமாக நகரப் பகுதியில் மக்

(08 ஆம் பக்கம் பார்க்க)

## உயிர் அச்சுறுத்தலால் சரண் அடைபவர்களை தங்கவைக்க நீதிமன்று அருகே புனர்வாழ்வு நிலையம்

### பிரதம நீதியரசர் அமைச்சுச் செயலாளருக்கு உத்தரவு

யாழ்ப்பாணம்,ஜூலை 26

குடாநாட்டில் உயிர் அச்சுறுத்தல் காரணமாக சரண் அடைபவர்களை தங்க வைத்துப் பராமரிக்க யாழ்.நீதிமன்றத்துக்கு சமீபமாக இடம் ஒன்றைக் கண்டறிந்து அங்கு புனர்வாழ்வு நிலையம் அமைத்து அவர்களை தங்க வைக்க ஏற்பாடு செய்யவும்.

பிரதம நீதியரசர் சரத் என் சில்வா நீதி அமைச்சின் செயலரும் புனர்வாழ்வு ஆணையாளருமான கம்லத்துக்கு மேற்கண்ட உத்தரவை விடுத்துள்ளார்.

(08 ஆம் பக்கம் பார்க்க)

## கிழக்கில் நடக்கும் தேர்தல் இரத்தக்களரியில் முடியும்!

### விடுதலைப்புலிகள் எச்சரிக்கை

கிளிநொச்சி, ஜூலை 26

"கிழக்கை ஸ்ரீலங்காப் படைகள் ஆக்கிரமித்திருக்கும்வரை அங்கு அமைதிநிலை தோன்றுவது சாத்தியமே இல்லை. அப்படியிருக்கும்போது அங்கு தேர்தல் நடத்தினால் அது இரத்தக் களரியிலேயே முடியும்"

-இவ்வாறு எச்சரித்திருக்கிறார் தமிழீழ விடுதலைப் புலிகளின் இராணுவப் பேச்சாளர் இராசையா இளந்திரையன்.

அமெரிக்காவில் இருந்து வெளியாகும் 'புளூம் பேர்க்' என்ற பத்திரிகைக்கு அவர் வழங்கிய செவ்வியிலேயே இதனைத் தெரிவித்தார். "எமது மக்களைப் பாதுகாப்பதற்காக

(08 ஆம் பக்கம் பார்க்க)

## மூதூர் கிழக்குப் பாதுகாப்பு வலயத்துக்கு ஒட்டுமொத்த தமிழ் மக்களும் எதிர்ப்பு


கொழும்பு, ஜூலை 26

மூதூர் - கிழக்குப் பகுதியை அரசு அதியுயர் பாதுகாப்பு வலயமாகப் பிரகடனப் படுத்தியமைக்கு எதிர்ப்புத் தெரிவித்து நேற்று வடக்கு, கிழக்குப் பிரதேசங்களில் பூரண ஹர்த்தால் அனுஷ்டிக்கப்பட்டது. இந்தக் கடையடைப்பு மற்றும் பணிப்புறக்கணிப்பினால் நேற்று வடக்கு, கிழக்கு முற்றாக முடங்கிப்போயிருந்தது.

தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் ஏற்பாட்டில் இடம்பெற்ற இந்த ஹர்த்தால் நடவடிக்கை வடக்குப் பிரதேசங்களான வவுனியா, கிளிநொச்சி, முல்லைத்தீவு, மன்னார் ஆகிய மாவட்டங்களில் முழு அளவில் அனுஷ்டிக்கப்பட்டது.

அங்கு வர்த்தக நிலையங்கள், அரச திணைக்களங்கள், பாடசாலைகள் எவை

(08 ஆம் பக்கம் பார்க்க)




# கொழும்பில் இன்று பேரணிச் சமர்!

கொழும்பு, ஜூலை 26

தலைநகர் கொழும்பில் இன்று ஆளும்தரப்பும் எதிர்த்தரப்பும் ஏட்டிக்குப் போட்டியாக- ஒரு தரப்பை மறுதரப்பு எதிர்த்தும், கண்டித்தும் - பெரும் பேரணிகளையும் பொதுக் கூட்டங்களையும் நடத்துகின்றன.

அரசுத் தரப்பின் ஊழல்களைக் கண்டித்து ஐ.தே.க., மங்கள கூட்டணி ஒருபுறமும் -

தொப்பிகலவில் வெற்றியை ரணில் விக்கிரமசிங்க குறைத்து மதித்துவிட்டார் - குறை கூறிவிட்டார் - என்று கூறி அவருக்கும் அவரது கட்சிக்கும் எதிராக ஆளுந்தரப்பு மறுபுறமும் - இன்று களத்தில் இறங்குகின்றன.

இரு பிரதான அணிகளுக்கும் இடையிலான இன்றைய பேரணிச் சமரைச் சமாளிப்பது எப்படி என்று தெரியாமல் இடைநடுவில் நின்று தலையைப் பிய்த்துக் கொண்டிருக்கின்றது பொலிஸ் தலைமை.

'நாடுமுடிந்தது முன்னுக்கு வாருங்கள்' என்ற தொனிப் பொருளில் ஐக்கிய தேசியக் கட்சியும் ஸ்ரீலங்கா சுதந்திரக்கட்சியின் மக்கள் பிரிவும் இணைந்து நடத்தும் 'மக்கள் அலை' எழுச்சி நிகழ்வு இன்று பிற்பகல் ஒரு மணிக்கு கொழும்பு ஹைட்பார்க்கில் நடைபெறவுள்ளது. இரு கட்சிகளினதும் ஆதரவாளர்கள் பொரளையிலிருந்து பேரணியாக ஆரம்பித்து 'ஹைட்பார்க் கோணர்' முன்பாக சென்றடைந்ததும் அங்கு பெரும் பொதுக் கூட்டம் ஒன்று நடைபெறும். அதில் ஐ.தே.க. தலைவர் ரணில் விக்கிரம சிங்க, பொதுச் செயலாளர் திஸ்ஸ அத்தநாயக்க, மங்கள சமரவீர

(08 ஆம் பக்கம் பார்க்க)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மக்கள் மனம் நிறைந்த தமிழ் நாளிதழ்

# பட்டினியை எதிர்நோக்கும் பிரதேசங்களை உள்ளடக்கிய நாடுகளில் இலங்கையும் ஒன்று

## கிழக்கிலும் வடக்கிலும் பட்டினி நிலை வரலாம்

கொழும்பு, ஜூலை 26

மிகக்கடுமையான பட்டினி அல்லது பட்டினி உருவாகக் கூடிய சூழ்நிலை உள்ள பகுதிகளைக் கொண்ட நாடுகளின் பட்டியலில் இலங்கையும் இப்போது சேர்ந்துள்ளது. ஐ.நாவின் உலக உணவுத் திட்டத்தின் பட்டியலிலேயே இலங்கையும் சேர்க்கப்பட்டுள்ளது.

ஆப்கானிஸ்தான், எதியோப்பியா, சோமாலியா, சாட், சூடான், கொங்கோ, ஆக்கிரமிக்கப்பட்ட பலஸ்தீனப் பகுதிகள், சிம்பாப்வே மற்றும் கென்யா ஆகியவை இப்பட்டியலில் ஏற்கனவே இடம்பிடித்துள்ள நாடுகளாகும்.

உலகில் பட்டினிக்குள்ளான இப்பகுதிகளில் வாழும் மக்கள் நாளைய தினம் தமக்கு என்ன உணவு கிடைக்கும் என்பதை அறியாதவர்களாகவே இருக்கின்றார்கள் என்று ஐ.நா. உணவுத் திட்டம் தனது அறிக்கை ஒன்றில்குறிப்பிட்டுள்ளது.

மட்டக்களப்பில், புதிதாக விடுவிக்கப்பட்ட பகுதிகளிலுள்ள தமது சொந்த இடங்களுக்குத் திரும்பியுள்ள சுமார் 74 ஆயிரம் இடம்பெயர்ந்த மக்கள் தமது உணவுப் பொருளை உற்பத்தி செய்து கொள்ள உதவி புரியாவிடில் உணவுப் பஞ்சத்தை எதிர்நோக்கும் நிலைக்குள்ளாவார்கள் என்றும் ஐ.நா.உணவு அபிவிருத்தித் திட்டம் எச்சரித்துள்ளது.

இந்த மக்கள் தமது அன்றாட வாழ்வியலை மீளவும் ஆரம்பிப்பதற்கு அரசாங்கத்தினதும் ஐ.நா. உணவுத் திட்டத்தினதும் அவசர உதவிகளை எதிர்பார்க்கிறார்கள்.

எதிர்வரும் மழைகாலத்தில் - பெரும்போகத்தில் - இம்மக்கள் நெல்விளைச்சலில் ஈடுபடுவதாயின் அவர்கள் இருக்கும் பகுதிகளில் உதவிப் பணிகளை மேற்கொள்ளும் அரசசார்பற்ற நிறுவனங்கள் முழு அளவில் சேவையில் ஈடுபட வசதியிருக்க வேண்டும்- என்று ஐ.நா.அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

மட்டக்களப்பு மேற்குப் பகுதியில் திரும்பி வந்துள்ள மக்களுக்கு உணவு விநியோகத்தை ஐ.நா.உணவுத் திட்டம் ஏற்கனவே ஆரம்பித்துள்ளது.

இதேவேளை- .

மக்கள் பட்டினியை எதிர்நோக்கும் நிலைமை கிழக்கில் மட்டுமல்ல, வடக்கிலும் பட்டினி நிலை உருவாகக் கூடிய சாத்தியமிருப்பதாக அண்மையில் ஐ.ஆர்.ஐ.என். செய்தி நிறுவனம் அறிவித்திருந்தது. மோதல்கள், இடப்பெயர்வு, பிரதான வீதிகள் மூடப்பட்டுள்ளமை, விவசாயம், மீன்பிடித் தொழில்களில் பாதுகாப்புத் தொடர்பான கட்டுப்பாடுகள் விதிக்கப்பட்டுள்ளமை போன்றவற்றினால் மக்கள் மத்தியில் போசாக்கு குறைவு நிலை ஏற்பட்டுவருவதாக அச்செய்தி நிறுவனம் அறிவித்திருந்தது. (அ-ப)

## கண்ணீர் அஞ்சலி

எமது சங்க அங்கத்தவரும், பொதுச்சபை உறுப்பினரும், எழுவைதீவு கிளை (இல.99)க்கான நிர்வாக சபை உறுப்பினருமான

### தம்பையா உருத்திரகுமார்

அவர்கள் கடந்த 22.07.2007 அன்று காலமான செய்தி கேட்டு அதிர்ச்சி அடைந்தோம். அன்னாரது குடும்பத்திற்கு எமது ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவித்துக் கொள்கின்றோம்.

பனை, தென்னை வள கூட்டுறவுச் சங்கம், ஊர்காவற்றுறை. (62935)

பணிப்பாளர்களும், பணியாளர்களும்.

## யாழ்ப்பாணம் - மாநகரசபை
## பகிரங்க ஏலவிற்பனை

யாழ்ப்பாணம் மாநகரசபையில் பின்வரும் பொருள்கள் 02-08-2007 ஆம் திகதி வியாழக்கிழமை குறிப்பிடப்பட்டுள்ள இடங்களில் ஒதுக்கப்பட்டுள்ள நேரத்தில் பகிரங்க ஏலத்தில் விற்பனை செய்யப்படவுள்ளது.

01. **பழைய இரும்புப் பொருள்கள்**
 மாநகரசபை சுகாதார வைத்திய அதிகாரி அலுவலகத்தில் முற்பகல் 10 மணிக்கு
02. **பழைய பத்திரிகைகள்**
 யாழ்.பொதுசன நூலகத்தில் முற்பகல் 11 மணிக்கு
03. **பாவித்த ரயர்கள்**
 மாநகரசபை வளவில் பிற்பகல் 2 மணிக்கு
04. **வெற்றுப்போத்தல்களும், விறகும்**
 மாநகரசபை சித்த ஆயுள்வேத வைத்தியசாலை வளவில் பிற்பகல் 3 மணிக்கு
05. **குறிப்பு :-**
 1. ஏலத்தில் வெற்றிகொள்பவர் உடனடியாக முழுப் பணத்தையும் செலுத்தி அன்றைய தினமே பொருள்களை அப்புறப்படுத்த வேண்டும்.
 2. பொருள்களை பார்வையிட விரும்புவோர் குறிப்பிடப்பட்ட இடங்களில் அலுவலக நேரத்தில் பார்வையிடலாம்.
 3. மேலதிக விவரங்கள் தேவைப்படுவோர் மாநகர சபை நானாவித இறைவரிப்பகுதியுடன் தொடர்பு கொண்டு பெற்றுக்கொள்ளவும்.

மாநகரசபை அலுவலகம், யாழ்ப்பாணம். 25-07-2007. (சி/53036)

மூ.செ.சரவணபவ, மாநகர ஆணையாளர், மாநகரசபை.

## மரண அறிவித்தல்

### செல்லையா கனகரத்தினம்

(சங்கானை)

வல்லை வீதி, சங்கானையைப் பிறப்பிடமாகவும் லண்டனை வசிப்பிடமாகவும் கொண்ட செல்லையா கனகரத்தினம் நேற்று (25.07.2007) புதன்கிழமை லண்டனில் காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற செல்லையா-இராசம்மா தம்பதியரின் புதல்வனும் சின்னமணியின் அன்புக் கணவரும் கனகராசா (கனடா), ஆனந்தராசா (கொழும்பு), சந்திரசேகரம் (லண்டன்), ரவிதாஸ் (கனடா), லலிதாராணி (கனடா), ஜெயராணி (கனடா), சாந்தினி (லண்டன்) ஆகியோரின் அன்புத் தந்தையுமாவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் லண்டனில் நடைபெறவுள்ளன என்பதையும், 26.07.2007 முதல் அன்னாரின் வல்லை வீதியில் உள்ள இல்லத்தில் துக்கம் அனுஷ்டிக்கப்படும் என்பதையும் உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவருக்கும் அறியத் தருகின்றேன்.

தகவல்:
ந.புவனேந்திரன் (பெறாமகன்).

மணி பவனம்,
வல்லை வீதி, சங்கானை.

## இரசாயனவியல் அறிவுப்போட்டி சனியன்று மத்திய கல்லூரியில்

யாழ்ப்பாணம், ஜூலை 26

இலங்கை இரசாயனவியல் கழகம் வருடாந்தம் நடத்தும் ஆஸ்திரேலியன் தேசிய இரசாயனவியல் அறிவுப் போட்டிப் பரீட்சை நாளை மறுதினம் சனிக்கிழமை காலை 9 மணிக்கு யாழ்.மத்திய கல்லூரியில் நடைபெறவுள்ளது.

பல்வேறு நாடுகளுக்கு இடையில் நடைபெறும் இந்தப் பரீட்சைக்கு யாழ்ப்பாணத்தில் இருந்து 729 மாணவர்கள் தோற்றுகின்றனர்.

ஜி.சீ.ஈ. உயர்தரத்தில் (தரம் 13இல்) கணித, விஞ்ஞானப் பிரிவு மாணவர்களுக்கு சிரேஷ்ட பிரிவாகவும் சாதாரணதர மாணவர்களுக்கு கனிஷ்ட பிரிவாகவும் இரண்டு பிரிவுகளாகப் பரீட்சை நடைபெறும். (அ-1)

## இந்து நாகரிக பாட கருத்தரங்கு நாளை

யாழ்ப்பாணம், ஜூலை 26

சுன்னாகம் இராமநாதன் கல்லூரி உயர்தர மாணவர் மன்றத்தின் ஏற்பாட்டில், ஜி.சீ.ஈ. (உயர்தர) பரீட்சையில் இந்து நாகரிகப் பாடத்துக்கு தோற்றும் மாணவர்களுக்கான கருத்தரங்கு நாளை வெள்ளிக்கிழமை காலை 9 மணி முதல் ஒரு மணி வரை கல்லூரியில் இடம்பெறவுள்ளது.

இந்து நாகரிகப் பாடத்துறைசார் விரிவுரையாளர்கள் இக்கருத்தரங்கில் விரிவுரை நிகழ்த்தவுள்ளனர். (அ-1)

## சிரமதானம் மூலம் மயானம் புனரமைப்பு

வலி.தெற்மேற்கு, ஜூலை 26

உள்ளூராட்சி வாரத்தை முன்னிட்டு விளாவெளி இந்து மயானம் சிரமதான மூலம் துப்புரவு செய்யப்பட்டுள்ளது. கடந்த மூன்று தினங்களாக நடைபெற்ற இந்த சிரமதானப் பணியில் வலி.தென்மேற்கு பிரதேச சபையின் பண்டத்தரிப்புப் பட்டிண உப அலுவலக ஊழியர்கள் மற்றும் இப்பகுதியில் உள்ள கிராம அபிவிருத்திச் சங்கங்கள், சனசமூக நிலையங்களின் உறுப்பினர்கள் உட்படப் பலர் கலந்து கொண்டு நீண்ட காலமாக இங்கு வளர்ந்திருந்த பற்றைகள், செடிகள் ஆகியனவற்றை வெட்டி அழித்துத் துப்புரவு செய்துள்ளானர். (1-135)

## தவறிவிட்டது

தட்டாதெருச் சந்திக்கும், யாழ்.நகர்ப் பகுதிக்கும் இடையில் தம்பையா தங்கேஸ்வரி என்பருடைய தேசிய அடையாள அட்டை (435642 748V) தவறிவிட்டது. கண்டெடுத்தவர்கள் தயவு செய்து 66/12, பிறவுண் வீதி, 5ஆம் ஒழுங்கை எனும் விலாசத்தில் ஒப்படைக்குமாறு கேட்டுக் கொள்கின்றேன். தகுந்த சன்மானம் வழங்கப்படும்.

## சர்வதேச இந்து மதகுருமார் ஒன்றியம்

**சுன்னாகம், உடுவில் பிரதேச அந்தண குருமார்கள், மாணவர்களுடன் கலந்துரையாடல்**

*இடம் :*
கதிரமலைச் சிவன் கல்யாண மண்டபம், சுன்னாகம்.

*காலம்:*
இன்று (26.07.2007) வியாழன் பி.ப.2 மணி

*தலைவர்:*
பிரம்மஸ்ரீ ப.மனோகரக் குருக்கள்

*விடயம்:*
குருமார்கள், மாணவர்களின் கல்விச் செயற்பாடுகள்.

மாணவர்கள், பெற்றோர்கள், குருமார்கள் இந்நிகழ்வில் கலந்து ஆலோசனைகள் வழங்கி சிறப்பிக்குமாறு அன்புடன் அழைக்கின்றோம்.

[illegible] குருக்கள் (செயலாளர்).

## மரண அறிவித்தல்கள்

### கந்தசாமி தவமணி

நவாலியைப் பிறப்பிடமாகவும் வட்டு.வடக்கு, சித்தன் கேணியை வசிப்பிடமாகவும் கொண்ட கந்தசாமி தவமணி நேற்று (25.07.2007) புதன்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற கணபதிப்பிள்ளை கந்தசாமியின் மனைவியும் குணசேகரம் (வட்டுக்கோட்டை), ஜெயக்குமார் (யாழ்ப்பாணம்), இரவிச்சந்திரன் (நல்லூர்), குகேந்திரன் (நவாலி), தெய்வேந்திரம் (கொழும்புத்துறை), ஜெயவதனி (வட்டுக்கோட்டை) ஆகியோரின் அன்புத் தாயும் ரஞ்சிதமலர், ரமணித்தேன், பிறேமாவதி, சுமதி, ராணி, பஞ்சாட்சரம் ஆகியோரின் அன்பு மாமியும் சுதாகரன், தீபன், சோபிகா - சுகிர்தரன், கார்த்திகா, தர்மினி - பாலமுரளி, பரந்தாமன், விஜயரமணன், சிவசொரூபன், டினேஸ், சஜீவ், சிவதாரணி, லவன், வியாசன், துஷ்யந்தன், அனந்தன், சுதர்சினி, கௌதமன், சதீஸனா,குணராஜ், சதீஸன், சர்மிளா, பிரதுஷா, மயூரன், விதுஷா ஆகியோரின் அன்புப் பேர்த்தியும் வர்ஷா, சாணுகா ஆகியோரின் பூட்டியுமாவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (26.07.2007) வியாழக்கிழமை பி.ப 12.30 மணியளவில் நடைபெற்று, பூதவுடல் தகனக்கிரியைக்காக வழுக்கையாறு இந்து மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

யாழ்ப்பாணம்.

தகவல்:
குடும்பத்தினர்.

### அலஸ் தார்சியஸ்



மன்னார், புதுக்கமத்தைப் பிறப்பிடமாகவும் யாழ்ப்பாணம், குருநகரை வசிப்பிடமாகவும் கொண்ட அலஸ் தார்சியஸ் 23.07.2007 திங்கட்கிழமை காலமாகிவிட்டார்.

அன்னார் காலஞ்சென்ற பிலேந்திரன் அலஸ் மற்றும் திரேசம்மா ஆகியோரின் மகனும் றோசலினின் (மேபிள்) அன்புக் கணவரும் சுகனியா, சர்மியா ஆகியோரின் பாசமிகு தந்தையும் பற்றிமா, காலஞ்சென்ற அந்தோனி முத்து மற்றும் அல்லி, உதயன், செல்வராணி (அருட்சகோதரி, தி.கு.க.), சகுந்தலா ஆகியோரின் அன்புச் சகோதரனுமாவார்.

அன்னாரின் பூதவுடல் இன்று (26.07.2007) வியாழக்கிழமை பி.ப. 3மணிக்கு அவரின் இல்லத்தில் இருந்து எடுத்துச் செல்லப்பட்டு, யாழ்.கொஞ்சேஞ்சி மாதா ஆலயத்தில் திருப்பலி ஒப்புக் கொடுக்கப்பட்டு திருப்பலியின் பின் யாழ்.கொஞ்சேஞ்சி மாதா சேமக்காலையில் நல்லடக்கம் செய்யப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

30, மவுன்கார்மேல் வீதி,
குருநகர்,
யாழ்ப்பாணம். (62934)

தகவல்:
மனைவி, பிள்ளைகள்.

### அரியராசா கார்த்திகா



உரும்பிராய் மேற்கைப் பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட அரியராசா கார்த்திகா 24.07.2007 செவ்வாய்க்கிழமை அகால மரணமானார்.

அன்னார் அரியராசா - சந்திரலீலா தம்பதியரின் அன்புப் புதல்வியும் ஜெனதராசா (பிரான்ஸ்), சாந்தரூபன், கஜென் ஆகியோரின் சகோதரியும் நடராஜா, செல்வரத்தினம், நவரட்ணம், குணரட்ணம், பஞ்சலிங்கம், யோகேஸ்வரி ஆகியோரின் மருமகளும் ராஜசுலோசனா, காலஞ்சென்றவர்களான செல்வராணி, வசந்தாதேவி மற்றும் சிவலிங்கம், இந்திரன் ஆகியோரின் பெறாமகளும் வதனியின் மைத்துனியுமாவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (26.07.2007) வியாழக்கிழமை முற்பகல் 11 மணிக்கு அவரின் இல்லத்தில் நடைபெற்று, பூதவுடல் தகனக்கிரியைக்காக உரும்பிராய் வேம்பன் மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

உரும்பிராய் மேற்கு,
உரும்பிராய். (62939)

தகவல்:
கஜென் (சகோதரன்).

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சுனாமியினால் பாதிப்புற்ற வீடுகள், பாடசாலைகள் புனரமைக்கப்பட்ட அரைகுறை நிலையில் ஸ்தம்பிதம்

## பாதிப்புற்ற வடமராட்சி மக்கள் விசனம்

கரவெட்டி, ஜூலை 26

வடமராட்சிப் பகுதியில் ஆழிப்பேரலையால் பாதிப்புற்ற வீடுகள், பாடசாலைகள் போன்றவற்றைச் சில நிறுவனங்கள் புனரமைப்புச் செய்யவும் புதிதாக கட்டித்தரவும் பொறுப்பேற்று தற்போது சிலவற்றை அதே நிலையிலும் சிலவற்றை அரைகுறை வேலைகள் நடைபெற்ற நிலையிலும் கைவிட்டுச் சென்றுள்ளன. இதனால் பாதிப்புற்றவர்கள் பெரிதும் கவலைக்குள்ளாகியுள்ளனர்.

பாடசாலை ஒன்று சுனாமியால் சேதமுற்ற நிலையில் ஓரளவு மாணவர்கள் கல்வியைத் தொடர்ந்தபோது நிறுவனம் ஒன்று புதிய கட்டடமாக கட்டித்தருவதாகப் பொறுப்பேற்று எஞ்சியவைகளையும் இடித்துத் தரை மட்டமாக்கியபின் அப்படியே கைவிட்டுச் சென்றுள்ளது. இப்பாடசாலை நூற்றுக் கணக்கான பிள்ளைகளுடன் இப்போது ஒரு தனியார் வீட்டில் இயங்கி வருகின்றது.

வேறும் சில பொது மக்கள் வீடுகள் தரை மட்டமாக்கப்பட்ட நிலையிலும், சிலருக்கு புது வீடுகள் கட்டித் தருவதாக பல பயன்தரு மரங்களை அழித்து காணிகள் துப்பபுரவாக்கப்பட்ட நிலையிலும் கைவிடப்பட்டுள்ளன.

மேற்படி நிறுவனங்கள் அரச அதிபரின் அனுமதியுடனேயே மேற்படி பொறுப்புக்களை ஏற்றிருந்தனவென்றும் இப்பொழுது இக்கட்டான நிலையில் மக்களையும் மாணவர்களையும் கைவிட்டுச் சென்றுள்ளன என்றும் பாதிக்கப்பட்டவர்கள் கவலை தெரிவிக்கின்றனர்.

**சிமெந்து தட்டுப்பாடு**

சிமெந்து இன்மையால் சுனாமியால் பாதிப்படைந்த மக்கள் வீடுகளைப் புனரமைக்கமுடியாமலும் புதிய வீடுகளைக் கட்ட முடியாமலும் கஷ்ட முறுகின்றனர்.

வடமராட்சியில் தற்போது மேற்படி மக்களுக்கு நியாய விலையில் வழங்கப்பட்டு வரும் சிமெந்து போதாமையாக உள்ளதாகத் தெரிவிக்கப்படுகின்றது. அத்தோடு நிவாரண மூலம் கட்டடங்களைக் கட்டிக்கொள்ள வெளிநாட்டுத் தனியார் நிறுவனங்களால் வழங்கப்பட்டு வரும் செலவுகளுக்கான கொடுப்பனவுகளும் போதாமலிருப்பதாத் தெரிவிக்கப்படுகின்றது.

தற்போ ஒரு பைக்கற் சிமெந்து தனியார் வர்த்தக நிலையங்களில் 1800/- ரூபாவரை விற்பனை செய்யப்பட்டு வருகின்றது.

(ப-70)



குருதிக் கொடையை முன்னிட்டு இலங்கை செஞ்சிலுவைச் சங்கத்தின் வலி. கிழக்கு கோப்பாய் பிரிவுத் தொண்டர்கள் யாழ். போதனா வைத்தியசாயில் யாழ். மாவட்ட கிளையின் அனுசரணையுடன் இரத்ததானம் வழங்கினர். அந்த நிகழ்வில் கிளை நிறைவேற்று உத்தியோகத்தர் என். குகராசன், பிரதிச் செயலாளர் மயில்வாகனம் மருத்துபீட மாணவர் பா. சயந்தன் ஆகியோரும் காணப்படுகின்றனர். (படம்: லக்ஸ்மன்)

# வடமராட்சி - தென்மராட்சி பேருந்து சேவை சீரில்லாததால் அரச ஊழியர், மாணவர் பாதிப்பு

யாழ்ப்பாணம், ஜூலை 26

பருத்தித்துறையிலிருந்து சாவகச்சேரிக்கான பேருந்து சேவைகள் அட்டவணை நேரமின்றி நினைத்த நேரத்தில் புறப்படுவதால் தென்மராட்சி பிரதேச அலுவலகங்களில் பணிபுரிவோரும் மாணவர்களும் பெருஞ்சிரமங்களை அனுமவிப்பதாகத் தெரிவிக்கப்பட்டது.

பருத்தித்துறையிலிருந்து சரசாலை ஊடாக சாவகச்சேரிக்கான பேருந்து காலை 6.15 மணிக்குப் புறப்படுவதால் அந்தப் பேருந்தில் மாணவர்களும் அரச உத்தியோகத்தர்களும் பயன்படுத்த முடியாத நிலை ஏற்படுகிறது. வடமராட்சிப் பிரதேசத்தில் உள்ள தென்மராட்சி பிரதேச அரச அலுவலர்கள் காலையில் புறப்படும் பேருந்தினைப் பயன்படுத்த முடிய வில்லையெனவும் -

அடுத்து கொடிகாமத்திற்கான பேருந்து டிப்போ அதிகாரிகள் குறிப்பிடும் நேரத்தில் புறப்படுவதால் (நேர அட்டவணையின்றி) அந்தப் பேருந்தினை நம்பி வீதிகளில் நிற்கும் மாணவர்களும், அரச உத்தியோகத்தர்களும் உரிய நேரத்தில் பாடசாலைகளுக்கோ, அலுவலகங்களுக்கோ செல்ல முடிவதில்லை எனவும் தெரிவிக்கப்பட்டது.

பருத்தித்துறையிலிருந்து காலை 6.15 மணிக்குப் புறப்படும் சரசாலை ஊடாக சாவகச்சேரிக்கான பேருந்து சேவையினை காலை 6.45 மணிக்கும், கொடிகாமத்திற்கான பேருந்து சேவையினை காலை 7 மணிக்கும் மாற்றி பேருந்துகளைச் சேவையில் ஈடுபடுத்துமாறு மாணவர்கள், அரச உத்தியோகத்தர்கள் சார்பில் கோரிக்கை விடுக்கப்பட்டுள்ளது.

(1-207)

# மின்பட்டியல் கொடுப்பனவைச் சேகரிக்க யாழ். தபாலகம் நடமாடும் சேவை

நல்லூர், ஜூலை 26

யாழ்ப்பாணம் பிரதம தபாலகம் பொது மக்களின் வசதியைக் கருத்தில் கொண்டு மின்பட்டியல்களுக்கான கொடுப்பனவுகள் தொடர்பான நடமாடும் சேவையை விரைவில் நடத்தவுள்ளது.

யாழ். பிரதம தபாலதிபர் கே. துரைசிங்கம் இத் தகவலைத் தெரிவித்தார்.

நகரப் பகுதியில் உள்ள வர்த்தக நிலையங்கள் உட்பட பொது மக்கள் குறிப்பிட்ட நடமாடும் சேவையூடாக நல்ல பயனைப் பெற முடியும்.

கட்டணங்கள் உடனுக்குடன் இலங்கை மின்சாரசபையுடன் சமன்செய்யப்படுவதால் நிலுவைக் கணக்கிற்கான வாய்ப்புக்கள் அற்றுப் போகும்.

மின் கட்டண கொடுப்பனவுக்கான தரகுப் பணம் எதுவும் அறவிடப்படமாட்டாது. பணம்செலுத்தியதற்கான முறையான பற்றுச் சீட்டுக்கள் வழங்கப்படும். இப்படி அவர் மேலும் தெரிவித்தார்.

(1-111)


## இறைவன் ஒருவரே!



இருப்பது ஒரே சூரியன். அது போல இருப்பது ஒரே இறைவன். ஆனால் இதயம் என்ற ஒவ்வொரு பாத்திரத்திற்கும் தக்கவாறு வெவ்வேறு பெயரும் உருவமும் கொள்கிறார். நமது உணர்ச்சிகளுக்கும் எண்ணங்களுக்கும் தகுந்தவாறு அவர் ராமா, கிருஷ்ணா, கோவிந்தா, நாராயணா என்று பலவடிவங்கள் எடுத்துக்கொள்கிறார். பெயர்களும் உருவங்களும் வேறு. ஆனால் கடவுள் ஒருவரே. ஒவ்வொருவரும் இந்த உண்மையை உணர்ந்து நடந்துகொள்ளவேண்டும்.

(உண்மையின் உண்மை)

சாயி சிந்தனை


## நிகழ்வுகள்

தென்மராட்சி கல்வி வலயப் பாடசாலைகளில் தரம் 6, 7, 8, 9 ஆகிய வகுப்புகளில் ஆங்கில மொழி மூலம் பாடங்களில் கற்பிக்கும் ஆசிரியர்களுக்கான செயலமர்வு நாளை சாவக்சேரி இந்து கல்லூரியில் நடைபெறும்.

கணிதம், விஞ்ஞானம், சமூகக்கல்வி, சுகாதாரமும் உடற்கல்வியும் ஆகிய பாடங்களை ஆங்கில மொழி மூலம் கற்பிக்கும், சாவகச்சேரி இந்துக் கல்லூரி, சாவகச்சேரி மகளிர் கல்லூரி, சாவகச்சேரி டிறிபேக் கல்லூரி, மீசாலை வீரசிங்கம் மகா வித்தியாலயம் ஆகியவற்றின் ஆசிரியர்களை கலந்து கொள்ளுமாறு வலயக் கல்விப் பணிப்பாளர் திருமதி அ. வேதநாயகம் கேட்டுள்ளார். (1-207)

* * *

சுன்னாகம் ஹற்றன் நஷனல் வங்கியின் 'பத்தும் விமன' பெப்ரவரி மாதத்துக்கான சீட்டிழுப்பும் பரிசளிப்பு விழாவும் இன்று பிற்பகல் 3 மணிக்கு வங்கிக்கிளையில் கிளை முகாமையாளர் கி. சுந்தரேஸ்வரன் தலைமையில் இடம் பெறவுள்ளன.

உடுவில் உதவிப் பிரதேச செயலர் செல்வி த. மஞ்சுளாதேவி பிரதம விருந்தினராகக் கலந்துகொள்வார். (1)

* * *

சரசாலை வடக்கு ஐக்கிய நாணய சங்கத்தின் 75ஆவது வருட பூர்த்தி விழா நாளை வெள்ளிக்கிழமை பிற்பகல் 2 மணிக்கு நடைபெறும்.

சங்கத்தலைவர் த. சபாநாயகம் தலைமையில் நடைபெறும் இந்நிகழ்வில் யாழ். மாவட்ட உதவிக் கூட்டுறவு ஆணையாளர் பொ. சிவலிங்கமும், சிறப்பு விருந்தினராக உதவிக் கூட்டுறவு ஆணையாளர் (எண் பார்வை) எஸ். கனகசபாபதியும் கௌரவ விருந்தினர்களாக தென்மராட்சி பிரதேச செயலர் செ. ஸ்ரீநிவாசன், தேசிய சேமிப்பு வங்கி சாகச்சேரி கிளை முகாமையாளர் சி. தனேஸ்வரன் ஆகியோரும் கலந்து கொள்வர். (1-207)

* * *

வலி. மேற்கு பிரதேச சபையின் உள்ளூராச்சி வாரத்தை ஒட்டிய நூலகக் கண்காட்சி நாளையும், மறுதினம் சனிக்கிழமையும் முற்பகல் 10 மணிக்கு வட்டுக் கோட்டை பொது நூலகத்தில் இடம்பெறவுள்ளது.

வட்டுக் கோட்டை உப அலுவலகப் பொறுப்பதிகாரி க. ஸ்கந்தராசா தலைமையில் நடைபெறும் இந்நிகழ்வில் பிரதம விருந்தினராக வலி. மேற்குப் பிரதேச சபை செயலாளர் இ. இராசதுரை கலந்துகொள்வார். (1)

**குடாநாட்டின் பிரதேசச் செய்திகள்**

# தென்மராட்சியில் 5ஆம் தர புலமைப்பரிசில் பயிற்சிப் பரீட்சை

யாழ்ப்பாணம், ஜூலை 26

தென்மராட்சி கல்வி வலயப் பாடசாலைகளில் ஐந்தாம் தர புலமைப் பரிசில் பரீட்சைக்குத் தோற்றும் மாணவர்களுக்கான ஏழாவது தொடர் பயிற்சிப் பரீட்சை நாளை நடத்தப்படவுள்ளது.

வலயக் கல்வி அலுவலகத்தினால் தயாரிக்கப்பட்ட வினாத்தாள்கள் மூலம் பயிற்சிப் பரீட்சை நடத்தப்பட்டு வருவதாகத் தெரிவிக்கப்பட்டது.

# தென்மராட்சி கல்வி வலயத்தில் நடந்த நாடகப் போட்டியில் வெற்றிபெற்றோர்

யாழ்ப்பாணம், ஜூலை 26

தென்மராட்சி கல்வி வலயப் பாடசாலைகளுக்கிடையில் நடத்தப்பட்ட வலயமட்ட நாடாகப் போட்டிகளின் முடிவுகள் அறிவிக்கப்பட்டுள்ளன.

காத்தவராயன் மற்றும் விசேட சிந்து நடைக் கூத்துக்களும், இசை நாடகங்களும் போட்டியில் கலந்துகொண்டன.

போட்டி முடிவுகள் வருமாறு:

***காத்தவராயன் கூத்து:***

மட்டுவில் சந்திரமௌலீச வித்தி, சாவகச்சேரி இந்துக் கல்லூரி, மந்துவில் றோ.க.த.க. பாடசாலை

***விசேட கூத்து:***

மீசாலை வீரசிங்கம் ம.வி., நாவற்குளி ம.வி., சாவகச்சேரி இந்துக் கல்லூரி.

***வடமோடி நாடகம்:***

கைதடி நாவற்குளி அ.த.க. பாடசாலை.

***இசை நாடகம்:***

சாவகச்சேரி மகளிர் க்ல்லூரி, கைதடி முத்துக் குமாரசுவாமி ம.வி., மட்டுவில் சந்திர புரஸ்கந்தவரோதய ம.வி.

***சிறந்த நடிகர்:***

விசேட கூத்து - ப. பவதாரிணி - நாவற்குளி ம.வி., தினேஸ் மகேந்திரன் - மீசாலை வீரசிங்கம் ம.வி., இ. சர்மிளா - சாவக்சேரி இந்து .

இசை நாடகம் - ஸ்ரீஸ்கந்தராசா நிசல்யா - சாவச்சேரி மகளிர் கல்லூரி, செபாசியாம் பிள்ளை மேரி ஸ்ரெலா - சாவகச்சேரி மகளிர் கல்லூரி, சேனாதி கௌசிகன் - கைதடி முத்துக்குமாரசுவாமி ம.வி.

பெற்றி பெற்ற கூத்துகள் மற்றும் இசை நாடகங்கள் சிறந்த நடிகர்கள் ஆகியவற்றுக்கான விருதுகளும் சான்றிதழ்களும் கடந்த ஞாயிற்றுக்கிழமை வழங்கப்பட்டன.

# பரீட்சைகளுக்கான விண்ணப்பங்கள்

யாழ்ப்பாணம், ஜூலை 26

இலங்கை உயர் தொழில்நுட்பத் கல்வி நிறுவனத்தினால் பொறியியல் உயர் தேசிய டிப்ளோமா பாடநெறிக்கான (2007-2008) மாணவர்களை அனுமதிப்பதற்கான விண்ணப்பங்களைக் கோரியுள்ளன.

மூன்றாண்டு காலத்திற்கான ஆங்கில மொழி மூலம் நடத்தப்படவுள்ள இந்தப் பயிற்சிநெறிக்கு 2006 ஆம் ஆண்டிற்கு முன்னர் நடைபெற்ற க.பொ.த. உயர்தரப் பரீட்சையில் (பழைய பாடத்திட்டம்) பிரயோக கணிதம், தூயகணிதம், பௌதிகம், இரசாயனம் ஆகிய பாடங்களில் ஒரே தடவையில் சித்தி அல்லது க.பொ.த.உயர்தர (புதிய பாடத்திட்டத்தில்) இணைந்த கணிதம் உட்பட மூன்று பாடத்தில் சித்தி பெற்றிருத்தல் வேண்டும் அத்துடன், க.பொ.த.(சாதாரணதரத்தில்) ஆங்கிலத்தில் சித்திபெற்றிருத்தல் வேண்டும். 23 வயதுக்கு உட்பட்டவர்களுக்கு முன்னுரிமை அளிக்கப்படும் எனவும் அறிவுறுத்தப்பட்டுள் ளது.

சிவில் மின்சார, மெக்கானிக்கல் பயிற்சி நெறிகளுக்கே விண்ணப்பங்கள் கோரப்பட்டுள்ளன. மேலதிக விவரங்களை 27-07-2007 ஆம் திகதிய அரச வர்த்தமானியில் பார்வையிடலாம். (1-86)

* * *

யாழ்ப்பாணம், ஜூலை 26

இலங்கைக் கால்நடை உற்பத்திச் சுகா தார சேவை உத்தியோகத்தர்களுக்கான முதலாம், இரண்டாம் வினைத்திறமைகாண் தடைதாண் டல் பரீட்சைக்கான விண்ணப்பங்களைக் கால் நடை உற்பத்திச் சுகாதார சேவைகள் ஆணையாளர் நாயகத்தினால் கோரப்பட்டுள்ளது.

அடுத்த மாதம் 10 ஆம் திகதிக்கு முன்னர் உரிய விண்ணப்பங்களை அனுப்பிவைக்கும்படி அறிவுறுத்தப்பட்டுள்ளது.

30-10-2006 ஆம் திகதி குறிப்பிட்ட சேவையில் இணைந்துகொண்ட அரச உத்தியோகத்தர்கள் இரண்டு தடை தாண்டல் பரீட்சைக்கும் தோற்ற உரிய வசதிகள் செய்யப்பட்டுள்ளதாகவும் தெரிவிக்கப்பட்டது.

மேலதிக விவரங்களை 20-07-2007 ஆம் திகதிய அரச வர்த்தகமானியில் பார்வையிடலாம். (1-86)

* * *

யாழ்ப்பாணம், ஜூலை 26

வளிமண்டலவியல் திணைக்களத்தில் தொழில் நுட்பவியலாளர் பதவிக்கான இலங்கைத் தொழில்நுட்ப சேவையின் II ஆம் வகுப்பின் 'ஆ' பிரிவுக்கு ஆள்சேர்ப்புச் செய்வதற்கான போட்டிப் பரீட்சைக்கான விண்ணப்பங்களை ஆண், பெண் இருபாலரிடமும் இருந்து கோரப்பட்டுள்ளது.

பரீட்சைத் திணைக்களத்தால் நடத்தப்படவுள்ள போட்டிப் பரீட்சை செப்ரெம்பர் மாதம் கொழும்பில் தமிழ், ஆங்கிலம், சிங்களம் ஆகிய மூன்று மொழிகளிலும் நடைபெறவுள்ளது.

உரிய விண்ணப்பங்களை 24-08-2007 ஆம் திகதிக்கு முன்னர் வளிமண்டலத் திணைக்களப் பணிப்பாளருக்கு அனுப்பி வைக்கும்படியும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

மேலதிக விவரங்களை 20-07-2007 ஆம் திகதி வெளியான அரச வர்த்தமானியில் பார்வையிடலாம். (1-68)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

புதிய கிளை நிறுவனத்துடன் நாம்...!
COMPUTER EXPRESS
ஒருவாரகால முழுநேர கற்கைநெறிகள்

Jaffna Head office
No 15, Sirambiyadi Lane (off Stanly Rd.)
021-222 8250, 0777 222422

Branch office
No 167, Kasthuriyar Rd, (Near Uthayan Publication) Jaffna.

Diploma in Hardware Engineering
❖ Assembling ❖ Upgrading ❖ Troubleshooting ❖ Fault Finding ❖ Repairing ❖ Servicing ❖ Software Installation ❖ Configuring ❖ Networking Etc..
Course Fee :2000/=

Diploma in Computerized Accounting
ACCPAC + Quick Books Premier + MYOB ஆகிய முன்னணி Accounting Software க்ளினூடாக கற்பிக்கப்படும்.
Course Fee :3500/=

Diploma in Video Mixing
❖ Introduction to Computer ❖ Operating System(Win XP) ❖ Internet & email ❖ Adobe Photoshop ❖ Adobe Premier ❖ Cool3D Studio ❖ Pinnacle Studio ❖ VCD Cutter.
Course Fee :3000/=

Diploma in Graphic Designing
❖ Introduction to Computer ❖ Operating System(Win XP) ❖ Internet & email ❖ Adobe Photoshop ❖ Corel Draw ❖ Cool3D Studio ❖ Macro media Flash MX
Course Fee :2000/=

ஒரே நாளில் ஆரம்பம்:-30/07/2007- 09.00AM

# மரண அறிவித்தல்கள்

## திருமதி பாலசிங்கம் இராசாத்தி



பண்டத்தரிப்பைப் பிறப்பிடமாகவும் மானிப்பாயை வசிப்பிடமாகவும் கொண்ட திருமதி பாலசிங்கம் இராசாத்தி நேற்று (25-07-2007) புதன்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற அப்புத்துரை-சரஸ்வதி தம்பதியரின் பாசமிகு மகளும் பாலசிங்கத்தின் அன்பு மனைவியும் சத்தியானந்தன் (பலநோக்கு கூட்டுறவுச்சங்கம், மானிப்பாய்), சத்தியரஞ்சன், மாலினி, சத்தியஜீவன், மாலதி ஆகியோரின் அன்புத்தாயும் ஜெயந்தி, சாந்தி, மயூரநாதன் ஆகியோரின் பாசமிகு மாமியும் இராசேந்திரம், துரசிங்கம், பூபதி, தங்கரத்தினம், அன்னரத்தினம், பரமேஸ்வரி, புஸ்பம், பாலசுந்தரம் ஆகியோரின் அன்புச்சகோதரியும் மதுஷாயினி, டனுஷாயினி, சயந்தன், கிருஷாயினி, தேனுஜா ஆகியோரின் பேர்த்தியும் இராசாத்தி, செல்லக்கிளி (இராசமணி), சரஸ்வதி ஆகியோரின் மைத்துனியுமாவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (26-07-2007) வியாழக்கிழமை அவரது இல்லதில் கிரியைகள் இடம்பெற்று, பூதவுடல் 10 மணியளவில் பிப்பிலி மயானத்திற்கு தகனக்கிரியைகளுக்காக எடுத்துச்செய்யப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

*இராஜகாரியர் வீதி,*
*மானிப்பாய் வடக்கு.* (62922)

தகவல்:
**குடும்பத்தினர்.**

## சுப்பிரமணியம் லோகநாதன்



நாச்சிமார்கோயிலடியைப் பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட சுப்பிரமணியம் லோகநாதன் நேற்று (25.07.2007) புதன்கிழமை காலமாகிவிட்டார்.

அன்னார் காலஞ்சென்ற சுப்பிரமணியம் - நாகேஸ்வரி தம்பதியரின் அன்பு மகனும் காலஞ்சென்ற விஜயராணியின் அன்புக் கணவரும், திருக்குமரனின் பாசமிகு தந்தையும் வீரகத்திப்பிள்ளை - சிவபாக்கியம் தம்பதியரின் மருமகனும், பூபாலசரஸ்வதி, லோகேஸ்வரி (உபதபால் அதிபர், திருநெல்வேலி), காலஞ்சென்ற லோகேந்திரராணி ஆகியோரின் அன்புச் சகோதரனும், சுபத்திரா, வேதநாயகி, விஜேந்திரன், பர மேஸ்வரன் ஆகியோரின் மைத்துனரும், ஜெயகாந்தன், சங்கரநாதன், ஸ்ரீரஞ்சினி ஆகியோரின் சகலனும், சாலினி, சுவேதினி ஆகியோரின் பெரியப்பாவும் சிவகாமி, அபிராமி, சங்கரி, மனோரஞ்சிதா, தர்சிகா ஆகியோரின் மாமனுமாவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் நேற்று (25.07.2007) புதன்கிழமை பிற்பகல் 3 மணியளவில் அவரது இல்லத்தில் நடைபெற்றன.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

*531/4,* K.K.S. *வீதி,*
*யாழ்ப்பாணம்.* (62923)

தகவல்:
**லோகேஸ்வரி** *(சகோதரி),*
**சுபத்திரா** *(மைத்துனி).*

## ஏகாம்பரம் விருத்தாசலம்



யாழ்ப்பாணம், வடமராட்சி, பொலிகண்டியைப் பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட ஏகாம்பரம் விருத்தாசலம் நேற்று (25-07-2007) புதன்கிழமை காலமாகிவிட்டார்.

அன்னார் தவமணிதேவியின் அன்புக் கணவரும் சிவகணேசன் (பிரான்ஸ்), சிவரூபன் (சுவிஸ்), ஜெயந்தி(லண்டன்), மகாலட்சுமி (சுவிஸ்), யசோதா, அச்சுதன் ஆகியோரின் அன்புத் தந்தையும் பிரியா (பிரான்ஸ்), மாலதி (சுவிஸ்), சிவபாலன் (லண்டன்), சிறிமுருகானந்தன் (சுவிஸ்), விக்னானந்தம் (சிவரஞ்சனம் அச்சகம், கோண்டாவில்) ஆகியோரின் அன்பு மாமனும் சிறேசியன் (குபேரன்), தினுசா, தனுசா, சாதனா, சரிகன், யசஸ்வின் ஆகியோரின் அன்புப் பேரனுமாவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (26-07-2007) வியாழக்கிழமை காலை அவரது இல்லத்தில் இடம்பெற்று, பூதவுடல் தகனக்கிரியைக்காக ஊறணி மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

*பொலிகண்டி.* (62928)

தகவல்:
**வி.அச்சுதன்** *(மகன்).*

## வீடுவீடாகச் சென்று நாய்களுக்குத் தடுப்பூசி

நவாலி,ஜூலை26

நவாலியில் விலங்கு விசர்நோய் தடுப்பூசி மருந்து வீடுவீடாகச் சென்று பொதுச் சுகாதாரப் பரிசோதகர்களினால் நாய்களுக்கு ஏற்றப்பட்டு வருகின்றது.

ஒலிபெருக்கி பொருத்திய ஓட்டோ வண்டியில் நாய்கள் மூலம் மக்களுக்கு ஏற்படும் நோய்கள் மற்றும் விளைவுகள் பற்றிய அறிவுறுத்தல்களை வழங்கியவாறு இத்தடுப்பூசி மருந்து ஏற்றப்படுகிறது. (1-100)

## பாதுகாப்பு வலயத்துக்குள் சென்ற மூவருக்கும் பிணை

யாழ்ப்பாணம் ஜூலை 26

மாதகல் அதிபாதுகாப்பு வலயத் துக்குள் ஊடுருவியதாக கைதான மூவரையும் 20 ஆயிரம் ரூபா சரீரப் பிணையில் செல்லமல்லாகம் நீதிவான் திருமதி ச.இளங்கோவன் அனுமதித்தார்.

கடந்த மாதம் விறகுவெட்டச் சென்ற போது இந்த மூவரும் தவறுதலாக அதிஉயர் பாதுகாப்பு வலயத்துக்குள் சென்றுவிட்டனர். அவர்களை படையினர் பிடித்து பொலிஸாரிடம் ஒப்படைத்திருந்தனர்.

நீதிமன்ற உத்தரவில் விளக்கமறியலில் வைக்கப்பட்டிருந்த இவர்கள் நேற்று முன்தினம் நீதி மன்றத்தில் ஆஜர் செய்யப்பட்டனர். அவர்களைச் சீரப்பிணையில் செல்ல நீதிவான் அனுமதித்தார். (1)

## கால்நடை அபிவிருத்தி உத்தியோகத்தர் பதவிக்கு விண்ணப்பம் கோரப்பட்டுள்ளது

யாழ்ப்பாணம், ஜூலை 26

வடக்கு மாகாண பொதுச் சேவையின் கால்நடை அபிவிருத்தி உத்தியோகத்தர் பதவிக்கு ஆள்சேர்ப்புச் செய்வதற்கான விண்ணப்பங்கள் பொதுச் சேவை ஆணைக் குழுவால் கோரப்பட்டுள்ளன.

கால்நடை அபிவிருத்தி உத்தியோகத்தர் வகுப்பு II 'ஆ' பதவிக்கு ஜி.சீ.ஈ.உயர்தரப் பரீட்சையில் தூயகணிதம், பிரயோக கணிதம், பௌதிகவியல், இரசாயனவியல், இணைந்தகணிதம், உயிரியல், கமத்தொழில் ஆகிய பாடங்களில் 2 பாடங்கள் அடங்கலாக 3 பாடங்களில் சித்திபெற்றிருத்தல் வேண்டும்.

அத்துடன் வெலிசறை/அனுராதபுரம் வேளாண்மைப் பாடசாலை வழங்கும் இரண்டு வருட டிப்ளோமா சான்றிதழ் பெற்றிருத்தல் வேண்டும்.

கால்நடை அபிவிருத்தி உத்தியோகத்தர் பயிற்சித்தரத்திற்கு விண்ணப்பிப்பவர்கள் ஜி.சீ.ஈ. உயர்தரப் பரீட்சையில் ஒரே அமர்வில் 3 விஞ்ஞான பாடங்களில் சித்திபெற்றிருப்பதுடன் ஜி.சீ.ஈ. சாதாரணதரப் பரீட்சையில் மொழி / இலக்கியம், எண்கணிதம் / கணிதம், விஞ்ஞானம் உட்பட 4 பாடங்களில் திறமைச்சித்தியுடன் 6 பாடங்களில் சித்தி பெற்றிருக்கவேண்டும்.

விண்ணப்பிக்க விரும்புவோர் எதிர்வரும் 6ஆம் திகதிக்கு முன்னர் 'செயலாளர், மாகாண பொதுச்சேவை ஆணைக்குழு, வடக்கு மாகாணம், திருகோணமலை' என்ற முகவரிக்கு விண்ணப்பங்களை அனுப்பிவைக்குமாறு கேட்கப்பட்டுள்ளது. (202)

வீடு விற்பனைக்கு

பருத்தித்துறை சிவன் கோயிலுக்கு அருகில் நன்னீர் கிணற்றுடன் கூடிய வீடு உடன் விற்பனைக்கு உண்டு. (சி/53017)

நேரடித் தொடர்பு:
T.P.:0774084810

60 வருடங்களுக்கு முன் நாடகத் தந்தையென அழைக்கப்பட்ட கலையரசு

## கனகரத்தினம் சொர்ணலிங்கம்

அவர்களின்

## 25 ஆவது ஆண்டு நினைவலைகள்

நாடகத்தால் உயர்ந்தீர்
நாடகத்தை உயிர்ப்பித்தீர் - ஈழத்து
நாடகத் தந்தையென அழைக்கப்பட்டீர்
நாடகத்தை மறந்தாலும் உமை
நாம் மறக்கவில்லை.

*லோட்டன் வீதி,*
*மானிப்பாய்.* (62903)

குடும்பத்தினர்.

## போதனாசிரியர்கள் பதவிக்கான விண்ணப்பம்

கீழ்வரும் போதனாசிரியர்கள் பதவிக்கான விண்ணப்பங்கள் கீழ் குறிப்பிடும் தகைமையைக் கொண்டவர்களிடமிருந்து கோரப்படுகின்றன.

பதவி:- 1) விவசாய உபகரணங்கள் திருத்தல் (Agricultural Equipments Repair)
2) தோல் பொருள்கள் செய்தல் (Leather Products)

தகைமைகள் :-

1) விண்ணப்பதாரிகள் 18 வயதிற்கு குறையாமலும் 45 வயதிற்குட்பட்டவர்களுமாக இருத்தல் வேண்டும்.
2) க.பொ.த.(சா/த) பரீட்சையில் சித்தியடைந்திருத்தல் வேண்டும்.
3) குறித்த துறையில் பயிற்சி பெற்றவராகவிருத்தல் வேண்டும். சான்றிதழின் பிரதி இணைக்கப்படல் வேண்டும்.
4) குறித்த துறையில் குறைந்தது இரண்டு வருடகால அனுபவம் பெற்றிருத்தல் வேண்டும்.
5) நற்பிரஜையாகவும், சிறந்த ஆரோக்கியமுள்ளவராகவும் இருத்தல் வேண்டும்.

விண்ணப்பங்கள் சான்றிதழ்களின் பிரதிகளுடன் 01-08-2007 ஆம் திகதிக்குமுன் கிடைக்கக்கூடியதாக நேரிலோ அல்லது தபால் மூலமாகவோ *"மாவட்ட இணைப்பாளர், சர்வோதய மாவட்ட நிலையம், இல.3, பிளச்சர்ஸ் லேன், சுண்டிக்குளி, யாழ்ப்பாணம்"* என்ற முகவரிக்கு அனுப்பிவைக்கப்படல் வேண்டும். தகுதியுடையவர்கள் மட்டும் நேர்முகப் பரீட்சைக்கு அழைக்கப்படுவார்கள்.

**அ.கி.சிவசுப்பிரமணியம்,**
மாவட்ட இணைப்பாளர், சர்வோதயம், யாழ்ப்பாணம்.
**25-07-2007.** (சி/53032)

First & Best To Carry Away

UNISTA
Intel D 2.8 LGA Processor
Intel Core 2 duo Support Mother Board
256 Mb DDR1/2 Ram
80 Gb Hard disk 7200RPM
ATX Case with 450/500W Smps
DVD/CD_RW Combo
15" Digital Color Monitor
Keyboard
Mouse
Speaker
44,500

Price For Hands On Stock

UNIPRO
Intel P4 3.0/2M cache LGA Processor
Intel 945 Mother Board
Kingston 512 Mb DDR2 Ram
80 Gb Sata 7200RPM 3.0 Gbps DT
ATX Case with 450/500W Smps
DVD-RW
IBM 15" LCD Monitor
Keyboard
Mouse
Speaker
63,500 Only

UNIDUAL
Intel Pentium D 3.0/4M Dual Core LGA
Intel 945 Mother Board
1 Gb Kingston DDR2 Ram
160 Gb Sata 7200RPM 3.0 Gbps DT
DVD-RW
ATX Case with 500W Smps
17" ViewSonic Wide LCD
MultiMedia Keyboard
Optical Mouse
Speaker
75,500 Rush

AsRock LGA 5750/- ASUS LGA 8900/-
BioStar 8250 Intel Original 13500/-
478 AsRock 7750/- Intel Original 13000/-
COMBO 4250/- DVD-RW 5750/-
Mouse 300/-, 550/-, 650/- 800/-, 1600/- & 1800/-
Canon Laser Printer - 22000/-
Keyboard/Speaker 800/-
Internal or External TV Tuner 4900/-
All Type of Processors,Ups, Toners & Etc

also available LCD to CRT Change

Woofers 2.1,4.1 & 5.1

ReConditioned P4 System For Sale

IBM Lenovo A55
Branded New Pcs
Now in Hand
Branded New LapTops

UNIT
மனோகரா தியேட்டர் சந்தி
347, K.K.S Road, Jaffna
Ph:021-4590720

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கல்விச் சுடர் 18

க.பொ.த[உ/த] மாணவர்களுக்கான மாதிரி வினாத்தாள்

# அரசியல்

ஆக்கம்:- கல்விச்சுடர் ஆசிரியர் குழு

## பகுதி-1

01. பிரித்தானிய குடியேற்ற நாட்டாட்சிக் காலத்தில்,
   1) பௌத்த மதமும் கிறிஸ்தவ மதமும் அரசமதமாக ஆக்கப்பட்டது.
   2) ஆங்கிலக்கல்வி முறைக்குப் பதிலாக மேற்கத்தேயக் கல்விமுறை அறிமுகம் செய்யப்பட்டது.
   3) வர்த்தக, கிராமியப் பொருளாதார முறைகள் அறிமுகம்செய்யப்பட்டன.
   4) இராஜகாரியமுறை முடிவுக்குக் கொண்டுவரப்பட்டது.

02. கோல்புறூக்- கமரன் ஆணைக்குழுவின் விதப்புரைகளாவன,
   1) கரையோர மாகாணங்களையும் கண்டிய மாகாணங்களையும் இரு சமஷ்டி அரசுகளாகப் பிரித்தல்.
   2) சட்ட நிருபண சபையையும் சட்ட நிர்வாக சபையையும் ஸ்தாபித்தல்.
   3) ஐரோப்பியர் தொடர்பாக உயர் நீதிமன்றம் பெற்றிருந்த விசேட குடியியல் அதிகாரத்தைத் தொடர்ந்து பேணுதல்.
   4) இலங்கை முழுவதற்குமென 5 உயர் நீதிமன்றங்களை ஸ்தாபித்தல்.

03. 1833 இல் ஸ்தாபிக்கப்பட்ட சட்ட சபையானது,
   1) 15 அங்கத்தவர்களைக் கொண்டிருந்தது.
   2) மக்கள் பிரதிநிதிகள் மன்றமாக இருந்தது.
   3) சட்ட நிர்வாக சபைக்குப் பொறுப்புக் கூறியது.
   4) தேசாதிபதிக்கு எதிரான குற்றப் பிரேரணையை விசாரணை செய்தது.

04. 1911 ஆம் ஆண்டின் சீர்திருத்தம்,
   1) 1912 இல் நடைமுறைக்கு வந்தது.
   2) ஐரோப்பியரின் பிரதிநிதித்துவத்தை அதிகரித்தது.
   3) தேசாதிபதிக்கு அறிவுரை வழங்கும் மந்திரிசபையை அறிமுகப்படுத்தியது.
   4) வகுப்புவாரிப் பிரதிநிதித்துவம் அகற்றப்பட வேண்டும் எனச் சிபாரிசு செய்தது.

05. 1911இல் ஸ்தாபிக்கப்பட்ட சட்டநிருபணசபை,
   1) 37 உறுப்பினர்களை உள்ளடக்கியிருந்தது.
   2) 5 வருட பதவிக்காலத்திற்குத் தெரிவு செய்யப்பட்டது.
   3) சட்ட நிர்வாக சபையையும் உள்ளடக்கியிருந்தது.
   4) படித்த இலங்கையர் இருவருக்கு பிரதிநிதித்துவத்தை வழங்கியது.

06. இலங்கைத் தேசிய இயக்கம்,
   1) உள்ளூர் சுயாட்சியைக் கோருவதற்கு தவறியது.
   2) அரசியல் திட்ட வாதிகளால் வழிநடாத்தப்பட்டது.
   3) ஒன்றுபட்ட தேசிய இயக்கத்தை முன்னெடுத்துச் சென்றது.
   4) 1833 இன் யாப்புச் சீர்திருத்தக் கோரிக்கையை முன்வைத்தது.

07. இலங்கைத் தேசிய காங்கிரஸ்,
   1) 1919 இல் ஸ்தாபிக்கப்பட்டது.
   2) தேசிய விடுதலையை நோக்காகக் கொண்டிருந்தது.
   3) யாப்புச் சீர்திருத்தக் கோரிக்கைகளை முன்வைப்பதற்குத் தவறிவிட்டது.
   4) தீவிர மாகாண இயக்கமாக இருந்தது.

08. இலங்கையின் இடதுசாரி இயக்கம்,
   1) தேசிய சுதந்திரத்தைப் பெறுதலை நோக்காகக் கொண்டிருந்தது.
   2) நகர்ப்புறத் தொழிலாளர் வகுப்பினருடன் தனது அரசியல் செயற்பாடுகளை மட்டுப்படுத்தியிருந்தது.
   3) இலங்கைத் தேசிய காங்கிரஸை சுறுசுறுப்புடன் செயற்பட வைத்தது.
   4) பிரித்தானியர் ஆட்சிக்கு எதிராக ஒரு ஆயுதப் போராட்டத்தை ஒழுங்கு படுத்தியது.

09. 1921 ஆம் ஆண்டின் சீர்திருத்தம்,
   1) வரையறுக்கப்பட்ட வாக்குரிமையை அறிமுகப்படுத்தியது.
   2) சட்ட நிர்வாக சபையின் உறுப்பினர்கள் எண்ணிக்கையை 37 ஆக அதிகரித்தது.
   3) இனவாரிப் பிரதிநிதித்துவத்திற்கு முற்றுப்புள்ளி வைத்தது.
   4) தேசாதிபதிக்கு ஒதுக்கு அதிகாரத்தை வழங்கியது.

10. 1921 இல் ஸ்தாபிக்கப்பட்ட சட்ட நிருபண சபை,
   1) உத்தியோகப் பற்றுள்ளவர்களின் பெரும்பான்மையைத் தொடர்ந்தும் பேணியது.
   2) வர்த்தகசங்கத்தைப் பிரதிநிதித்துவப்படுத்துவதற்கு இரு உறுப்பினர்களைக் கொண்டிருந்தது.
   3) தேர்தல் மூலம் தெரிவு செய்யப்பட்ட உறுப்பினர்களின் எண்ணிக்கைக்குச் சமனான நியமன உறுப்பினர்களைக் கொண்டிருந்தது.
   4) சட்ட நிர்வாக சபையையும் தேசாதிபதியையும் உள்ளடக்கியிருந்தது.

11. 1921 ஆம் ஆண்டின் சீர்திருத்தம்,
   1) இலங்கை இடதுசாரி இயக்கத்தின் கோரிக்கையின் விளைவாகும்.
   2) ஏகாதிபத்திய ஆட்சியாளர்களின் நலனில் அக்கறை செலுத்தியது.
   3) தேசாதிபதியின் அதிகாரங்களில் குறைப்புச் செய்யத் தவறிவிட்டது.
   4) சட்டநிர்வாக சபைக்கு எல்லையற்ற நிதி அதிகாரத்தை வழங்கியது.

12. 1924 இல் ஸ்தாபிக்கப்பட்ட சட்டவாக்கசபை,
   1) 49 உறுப்பினர்களைக் கொண்டிருந்தது.
   2) தேசாதிபதியால் தலைமை தாங்கப்பட்டது.
   3) தேர்தல் மூலம் தெரிவு செய்யப்படாதோரை பெரும்பான்மையாகக் கொண்டிருந்தது.
   4) தனக்குக் கட்டுப்பட்ட சட்ட நிர்வாக சபையைக் கொண்டிருந்தது.

க.பொ.த[உ/த] மாணவர்களுக்கான மாதிரி வினாத்தாள்

# தமிழ்

ஆக்கம்:- கல்விச்சுடர் ஆசிரியர் குழு

சாதி பேதம் பாராதே
    சும்மா யெவரும் உனைத்தழுவ
ஏதுங் கலங்கா திருப்பதென்னே
    இயம்பாய் கன்னியாய்த் திருவே
ஏதுங் கலங்கா திருப்பதிங்கே
    எல்லா உயிரும் சமமென்றே
ஓதும் படைப்பின் ஒருமை நிலை
    உணர்த்துமுண்மை நிலைகண்டீர்.

i) இப்பாடல் மூலம் கவிஞர் விளக்கும் முக்கிய கருத்து யாது?
ii) கன்னியாயின் வெம்மை பற்றி கவிஞர் எவ்வாறு வர்ணிக்கிறார்?
iii) இப்பாடலில் வரும் அணி யாது?
iv) இது எத்தகைய பாங்கில் அமைக்கப்பட்டுள்ளது.

அல்லது

ஆ) பக்கத்தில் இருந்த அரிக்கன் விளக்கை எடுத்துக் கொண்டு 'அவர் சமையல் பகுதியை நோக்கிப் பிரயாணமானார். இடைவெளியில் குழாயடியில் உள்ள வழுக்குப் பிரதேசம் அடுத்த பகுதி விறகுக் கொட்டி முதலிய விபத்துக்கள் உள்ள 'பிராட்வேயை' எல்லாம் பொருட்படுத்தாது ஒருவாறு வந்து சேர்ந்தார். சமையல் அறை வாசலில் ஒரே புகைமயம். 'கமலம்' என்று கம்மிய குரலில் கூப்பிட்டுக்கொண்டே உள்ளே நுழைந்தார்.

உள்ளே புகைத்திரைக்கு அப்பால் இருந்து வீடோ! லட்சணமோ! விறகைப் பார்த்துப் பார்த்து வாங்கிக் கொண்டு வந்தியளே! ஒங்களுக்கின்னு தண்ணியிலே முக்கிக் கொடுத்தானா? எரியவே மாட்டுதில்லை? இங்கே என்ன இப்போது? விறகு வாங்கின சீரைப்பார்த்து மகிழ வந்தியளாக்கும்...! என்று வரவேற்புப் பத்திரம் வாசிக்கப்பட்டது.

''தீப்பெட்டியை இப்படி எடு. அதுக்குத்தான் வந்தேன்'' என்று நடைப்பக்கமாக பின்நோக்கி நடந்தார். ''இங்கே குச்சியுமில்லை. கிச்சியுமில்லை. அலமுவைத் தீப்பெட்டி வாங்க அனுப்பினேன். மண்ணெண்ணெய் விளக்கை நீங்கதான் துடைச்சுக்கொள்ளணும்'' என்றாள் கமலம். குழந்தையை அந்தியிலே வெளியே அனுப்பிவைக்கவே நான் வந்தபிறகு வாங்கிக் கொள்ளப்படாதா? என்று அதட்டினார் முருகதாசர்.

ஆமாம், சொல்ல மறந்து போயிட்டுதே. செட்டியார் வந்துட்டுப் போனார். நாளை விடியல்லை வருவாராம் என்றாள் கமலம். முருகதாசர் இந்த பாசுபதாஸ்திரத்தை எதிர்பார்க்கவில்லை......

i) இப்பகுதியினூடாக வெளிப்படும் முருகதாசரின் குடும்ப வறுமை நிலை.
ii) முருகதாசரின் மனைவி கமலத்தைப் பற்றி உள்ளத்தில் எழும் எண்ணங்கள்.
iii) ஆசிரியரின் கதை சொல்லும் முறை யாது?

## பகுதி-11

03. "பண்புடைமை'' என்னும் அதிகாரத்தில் திருவள்ளுவர் கூறுவனவற்றை அடிப்படையாகக் கொண்டு பின்வருவனவற்றை விளக்குக.
   அ) பண்புடைமையின் இயல்பு
   ஆ) பண்புடைமையின் உயர்வு
   இ) பண்புடைமை இல்லாவிடின் ஏற்படும் தீமை
   ஈ) சான்றாண்மைக்கு அடுத்து இவ்வதிகாரம் வைக்கப்பட்டதற்கான காரணம்.

04. திருவடி சூட்டுப்படலத்தில் பரதனின் குண இயல்புகள்
   அ) பரத்துவாசரைச் சந்தித்த போது
   ஆ) இராமனின் கூற்றுக்களினூடாக
   இ) பரதனின் கூற்றுக்களினூடாக
   வெளிப்படுத்தப்படுவனவற்றினை எடுத்துக் காட்டுக.

05. சிலப்பதிகார 'வழக்குரைக் கதையில்'
   அ) கோப்பெருந்தேவியின் கனவு
   ஆ) கோப்பெருந்தேவி மன்னன் இருக்கும் இடம் நோக்கிச் சென்ற விதம்
   இ) கண்ணகி அரண்மனை சென்று வாயிற் காவலனுடன் உரையாடுவதையும், வாயிற்காவலன் பாண்டிய மன்னனைப் புகழுவதையும் விளக்குக.

06. 'நாகம்மாள்' நாவலில் இடம்பெறும்
   அ) மூட நம்பிக்கைகள்
   ஆ) தத்துவக் கருத்துக்கள்
   இ) உவமையணிகள்
   என்பவற்றை எடுத்துரைக்க.

07. 'பாண்டு' என்ற கட்டுரையில்
   அ) பாண்டு என்ன என்பது பற்றியும்
   ஆ) பண்பாட்டினை அறிந்துகொள்ள உதவும் மூலகங்கள் பற்றியும்
   இ) ''அழகெல்லாம் ஒன்று என்பது உண்மை. ஆயினும் வேறுபாடுகளே உலகத்தின் பேரழகு'' என்ற கூற்றின் மூலம் உணர்த்தப்படுவது
   ஆகியவற்றையும் தெளிவுபடுத்துக.

08. 'வெண்ணிலா'வில்
   அ) இயற்கை அழகில் பாரதிக்கு இருந்த ஈடுபாடு
   ஆ) இக்கவிதையில் காணக்கூடிய நயம்
   இ) இதில் சொல்ல வரும் சமூகக் கருத்து
   ஈ) அழகை வர்ணிக்க கையாண்டுள்ள உத்திகள்
   என்பவற்றை எடுத்துரைக்க.

09. பின்வருவனவற்றினுள் எவையேனும் மூன்றினை விளக்குக.
   அ) "தீம்பாலுண்பவர்கொள்கலம் வரைதல்'' என்ற தொடர் மூலம் வெளிப்படும் தலைவியின் நிலை.
   ஆ) கலிங்கத்துப் பரணியில் நிழலில்லாமை மறைந்தமைக்கு ஆசிரியர் கூறும் நியாயங்கள்.
   இ) இராட்சணிய யாத்திரிகத்தில் இழையோடியுள்ள உவமை அணிகள்
   ஈ) திருக்குற்றாலக் குறவஞ்சியில் வசந்தவல்லி பந்தடிக்கும் அழகு
   உ) கம்பதாசனின் 'உதிர்ந்த மலர்' உமது உள்ளத்தில் எழுப்பும் உணர்ச்சி

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

# றோட்டரக்ட் நடத்திய வலைபந்தாட்டத்தில் யூனியன் கல்லூரி சம்பியனானது

யாழ்ப்பாணம், ஜூலை 26

சுன்னாகம் றோட்டரக்ட் கழகம் அங்கத்துவப் பாடசாலைகள் வலைப்பந்தாட்ட அணிகளுக்கு இடையே நடத்திய போட்டியில் தெல்லிப்பழை யூனியன் கல்லூரி வெற்றிபெற்று சம்பியனாகத் தெரிவு செய்யப்பட்டுள்ளது.

மருதனார்மடம் இராமநாதன் கல்லூரி மைதானத்தில் இடம்பெற்ற இறுதிப் போட்டியில் இராமநாதன் கல்லூரியும் யூனியன் கல்லூரியும் மோதிக் கொண்டன.

இப்போட்டியில் யூனியன் கல்லூரி 38:17 என்ற புள்ளிகளினால் இராமநாதன் கல்லூரியை வெற்றி கொண்டு சம்பியனாகியது.

இத்தொடரில் சிறந்த ஆட்ட நாயகியாக யூனியன் கல்லூரியைச் சேர்ந்த செல்வி டிலானியும், சிறந்த கோல் எய்துபவராக (Sutter)செல்வி.சுஜீபாவும் இராமநாதன் கல்லூரியைச் சேர்ந்த செல்வி கீர்த்திகா சிறந்த கோல் பாதுகாவலராகவும் தெரிவு செய்யப்பட்டனர்.

மூன்றாம் இடத்திற்கான போட்டியில் தெல்லிப்பழை மகாஜனாக் கல்லூரியும் கோப்பாய் கிறிஸ்தவக் கல்லூரியும் மோதிக் கொண்டதில் மகாஜனாக் கல்லூரி வெற்றி பெற்று 3ஆம் இடத்தைத் தட்டிக் கொண்டது. (1-68)



யாழ்.இந்து ஆரம்ப பாடசாலையின் முதன்மைநிலை ஒன்று மாணவர்களுக்கான விளையாட்டுப் போட்டிகள் கடந்த வாரம் பாடசாலை விளையாட்டு மைதானத்தில் நடைபெற்றன.

போட்டி ஒன்றில் வெற்றி பெற்ற மாணவர்களுக்கு பரிசில்களைப் பெறுவதற்காக வரிசையில் நிற்பதைப் படத்தில் காணலாம். (1-224)

# தாச்சிச் சுற்றுப் போட்டியில் மானிப்பாய் வெஸ்ரோன் சம்பியன்

யாழ்ப்பாணம்,ஜூலை 26

கொக்குவில் மேற்கு வராகியம்மன் விளையாட்டுக் கழகம் தாச்சி விளையாட்டு வீரர் அமரர் சிவகுமார் (செல்வம்) ஞாபகார்த்த கிண்ணத்திற்காக நடத்திய தாச்சி சுற்றுப் போட்டியில் மானிப்பாய் வெஸ்ரோன் விளையாட்டுக்கழகம் வெற்றி பெற்று வெற்றிக் கிண்ணத்தை சுவீகரித்துக் கொண்டது.

வராகி அம்மன் விளையாட்டுக் கழக மைதானத்தில் இடம்பெற்ற இறுதிப் போட்டியில் மானிப்பாய் வெஸ்ரோன் விளையாட்டுக் கழகமும், தாவடி காளியம்பாள் விளையாட்டுக் கழகமும் மோதிக் கொண்டன.

முதல் பாதி ஆட்டம் முடிவடையும் போது காளியம்பாள் விளையாட்டுக் கழகம் 5:2 என்ற பழங்கள் பெற்ற நிலையில் முன்னணி நிலையில் நின்றது.

ஆட்டம் முடிவடையும் நிலையில் 7:6 என்ற பழங்களினால் வெஸ்ரோன் விளையாட்டுக் கழகம் வெற்றிபெற்று சம்பியனானது.

போட்டியின் ஆட்டநாயகனாக வெஸ்ரோன் விளையாட்டுக் கழகத்தைச் சேர்ந்த சதீஸ் தெரிவு செய்யப்பட்டார்.

மூன்றாம் இடத்திற்கான போட்டியில் சுதுமலை புவனேஸ்வரி அம்பாள் விளையாட்டுக் கழகமும், யுவசக்தி விளையாட்டுக் கழக மும் மோதிக் கொண்டன.

ஆட்டம் 5:5 என்ற பழங்களினால் சம நிலையில் முடிவடைந்ததைந் தொடர்ந்து மேலதிகமாக வழங்கப்பட்ட 5 நிமிடத்தில் புவனேஸ்வரி அம்பாள் விளையாட்டுக்கழகம் மேலும் ஒரு பழத்தைப் பெற்றதைத் தொடர்ந்து 3ஆம் இடத்தைப் பெற்றுக் கொண்டது. (1-86)


## அபிவிருத்தி அதிர்ஷ்டம்

### உத்தியோகபூர்வ முடிவுகள்

901 நீலம்

வெற்றி இலக்கங்கள்

19 27 35 55

மகரம்

24-07-2007

செல்லுபடியாகும் தொடர் இல. 4181660 - 4196752

ஜக்பொட் பரிசு ரூபா.1,000,000/- வெல்லப்பட்டுள்ளது

| இணையும் இலக்கங்கள் | வெற்றியாளர் எண்ணிக்கை | பரிசுத் தொகை | மொத்தம் |
|---|---|---|---|
| 1 இலக்கம் | 332,314 | 10/- | 3,323,140/- |
| 2 இலக்கங்கள் | 30,432 | 20/- | 608,640/- |
| 1 இல. + லக்கினம் | 30,138 | 30/- | 904,140/- |
| 2 இல. + லக்கினம் | 2,780 | 100/- | 278,000/- |
| 3 இலக்கங்கள் | 818 | 500/- | 409,000/- |
| 3 இல. + லக்கினம் | 71 | 5,000/- | 355,000/- |
| 4 இலக்கங்கள் | 2 | 100,000/- | 200,000/- |
| 4 இல. + லக்கினம் | 1 | 1,000,000/- | 1,000,000/- |
| மொத்தம் | | | 7,077,920/- |
| முச்சக்கர வண்டிகளின் பெறுமதி | 5 | 204,700/- | 1,023,500/- |
| வெல்லப்பட்ட மொத்தப் பரிசுத் தொகை | 396,561 | | 8,101,420/- |

இந்த வெள்ளிக்கிழமை சுப்பர் பரிசுத் தொகை ரூபா 1,000,000/-

தொடர் இல. 5970729 க்கு மேற்பட்ட சிவப்பு நிற டிக்கட்டுக்கள் 2007 ஜூலை மாதம் 27 ஆம் திகதி வெள்ளிக்கிழமை சீட்டிழுப்புக்குச் செல்லுபடியாகும். வெற்றி பெறும் டிக்கட்டுக்கள் 6 மாதங்களுக்குச் செல்லுபடியாகும்.

அபிவிருத்தி அதிர்ஷ்டம் சீட்டிழுப்பில் பணப்பரிசு வெற்றி பெறாத டிக்கட்டுக்களில் முச்சக்கரவண்டி வெற்றி பெறும் ஐந்து டிக்கட்டுக்களின் தொடர் இலக்கங்கள்

| | |
|---|---|
| ஹம்பாந்தோட்டை | 4185288-3-72 |
| மாத்தறை | 4183640-0-38 |
| காலி | 4190317-3-56 |
| குருநாகல் | 4184999-0-90 |
| கம்பஹா | 4192050-4-44 |

வளமான வாழ்விற்கு

அபிவிருத்தி லொத்தர்

அபிவிருத்தி லொத்தர் சபை

33, சென் மைக்கேல் வீதி, கொள்ளுப்பிட்டி, கொழும்பு 03.


## பாடசாலைகள் கிரிக்கெட்;

# யாழ்ப்பாணக் கல்லூரி வெற்றி

யாழ்ப்பாணம், ஜூலை 26

யாழ்.மாவட்ட பாடசாலைகள் கிரிக்கெட் சங்கத்தினால் யாழ்.மாவட்டப் பாடசாலைகள் 17 வயதுப் பிரிவினர்களுக்கு இடையே நடத்தப்பட்டு வரும் கிரிக்கெட் சுற்றுப் போட்டியின் ஆட்டம் ஒன்றில் வட்டுக்கோட்டை யாழ்ப்பாணக் கல்லூரி வெற்றிபெற்றுள்ளது.

வட்டுக்கோட்டை யாழ்ப்பாணக் கல்லூரி மைதானத்தில் இடம்பெற்ற இப்போட்டியில் நெல்லியடி மத்திய மகா வித்தியாலயமும் யாழ்ப்பாணக் கல்லூரியும் மோதிக்கொண்டன.

முதலில் துடுப்பெடுத்தாடிய நெல்லியடி மத்திய மகா வித்தியாலயம் அனைத்து விக்கெட்டுக்களையும் இழந்து 59 ஓட்டங்களை மட்டும் பெற்றுக் கொண்டது.

ரி.பிரதீஸ், ஆர்.இராகுலன் ஆகியோர் தலா 12 ஓட்டங்களை பெற்றனர்.

நிகிதன், துஷ்யந்தன் ஆகியோர் தலா 4 விக்கெட்டுக்களை கைப்பற்றினர்.

பதிலுக்கு துடுப்பெடுத்தாடிய யாழ்ப்பாணக் கல்லூரி 8 விக்கெட்டுக்களை இழந்து 149 ஓட்டங்களைப் பெற்ற நிலையில் ஆட்டத்தை நிறுத்திக் கொண்டது.

எஸ்.நிரோகன், வி.பிரசாந் ஆகியோர் முறையே 58,29 ஆட்டங்களைப் பெற்றுக் கொண்டார்கள்.

ரி.பிரதீஸ் 4 விக்கெட்டுக்களை கைப்பற்றினார்.

இரண்டாவது இனிங்சில் துடுப்பெடுத்தாடிய நெல்லியடி மத்திய மகா வித்தியலாயம் 4 விக்கெட்டுக்களை இழந்து 102 ஓட்டங்களைப் பெற்ற நிலையில் ஆட்டம் நிறைவு பெற்றது.

ரி.பிரதீஸ், வி.பிரதீபன் ஆகியோர் முறையே 44,20 ஓட்டங்களைப் பெற்றனர்.

நிகிதன் 2 விக்கெட்டுக்களைக் கைப்பற்றினார். (1-86)

# யாழ்.இந்துக்கல்லூரி வென்றது

யாழ்ப்பாணம்,ஜூலை 26

யாழ்.மாவட்டப் பாடசாலைகள் கிரிக்கெட் சங்கத்தினால் யாழ்.மாவட்டப் பாடசாலைகள் 17 வயதுப் பிரிவினர்களுக்கு இடையே நடத்தி வரும் கிரிக்கெட் போட்டியொன்றில் மற்றொரு ஆட்டத்தில் யாழ்ப்பாணம் இந்துக் கல்லூரி வெற்றிபெற்றது.

யாழ்ப்பாணம் இந்துக் கல்லூரி மைதானத்தில் இடம்பெற்ற இப்போட்டியில் பருத்தித்துறை ஹாட்லிக் கல்லூரியும், யாழ்.இந்துக்கல்லூரியும் மோதிக் கொண்டன.

முதலில் துடுப்பெடுத்தாடிய யாழ்ப்பாணம் இந்துக்கல்லூரி அனைத்து விக்கெட்டுக்களையும் இழந்து 184 ஓட்டங்களை பெற்றுக் கொண்டது.

உமாதரன், சங்கீதன் ஆகியோர் முறையே 41, 32 ஓட்டங்களைப் பெற்றுக்கொண்டனர்.

ராஜீவ், சஜீவன் ஆகியோர் முறையே 05, 02 விக்கெட்டுக்களை வீழ்த்தினர்.

பதிலுக்கு துடுப்பெடுத்தாடிய ஹாட்லிக்கல்லூரி அனைத்து விக்கெட்டுக்களையும் இழந்து 184 ஓட்டங்களைப் பெற்றுக் கொண்டது.

ஹரிகரன், ராஜீவ் ஆகியோர் முறையே 68, 22 ஓட்டங்களைப் பெற்றுக்கொண்டனர்.

உமாதரன் 3 விக்கெட்டுக்களையும் மரியதர்சன், சங்கீதன் ஆகியோர் தலா 2 விக்கெட்டுக்களையும் வீழ்த்தினர்.

## விளையாட்டு

இரண்டாவது இனிங்சில் இந்துக் கல்லூரி 3 விக்கெட்டுக்களை இழந்து 59 ஓட்டங்களைப் பெற்றுக் கொண்டது.

சுதாகரன் ஆட்டமிழக்காமல் 26 ஓட்டங்களைப் பெற்றார்.

ராஜீவ் 2 விக்கெட்டுக்களைக் கைப்பற்றினார். (1-86)

# ஆசிரிய சேவைப் பரீட்சை: இலவசக் கருத்தரங்குகள்

ஆசிரியர் சேவை போட்டிப் பரீட்சைக்குத் தோற்றுவோரின் நலன் கருதி வடமராட்சி லயன்ஸ் கழகம் இன்றும் நாளையும் இலவசக் கருத்தரங்குகளை நடத்தவுள்ளது.

தேவரையாளி இந்துக் கல்லூரியில் பிற்பகல் 3 மணிக்கு ஆரம்பமாகும் இக் கருத்தரங்குகளில் அனுபவமிக்க விரிவுரையாளர்கள் கலந்து கொள்வர் என்று லயன்ஸ் கழகச் செயலாளர் எஸ்.தவச்செல்வன் தெரிவித்தார். (அ)

# வட்டு. லயன்ஸ் புதிய நிர்வாகம் பதவியேற்பு

வட்டுக்கோட்டை லயன்ஸ் கழகத்தின் 2007/2008 வருடத்திற்கான புதிய நிர்வாக சபையின் உத்தியோகபூர்வ பதவியேற்பு வைபவம் நாளை வெள்ளிக்கிழமை முற்பகல் 11.30 மணிக்கு கழகத்தின் வட்டு.தொண்டையம் தொழிற்பயிற்சி நிலைய மண்டபத்தில் நடைபெறவுள்ளது.

கழகத் தலைவர் டாக்டர் சி.சதாசிவம் தலைமையில் நடைபெறவுள்ள இந்த வைபவத்தில் பிரதம விருந்தினராக கொழும்பு லயன்ஸ் உதவி மாவட்ட ஆளுநர் லயன் நிமால் ராஜபக்ஷ, அவரது பாரியார் லயன் சீமாட்டி கீதா ராஜபக்ஷ ஆகியோர் கலந்துகொள்வர்.

கௌரவ விருந்தினராக வடக்கு - கபினெற் பிரதி செயலர் டாக்டர் வி.தியாகராசாவும் சிறப்பு விருந்திராக பிராந்தியம் 8 தலைவர் பி.ஆர்.ரஞ்சன், முன்னாள் பிராந்தியத் தலைவர் லயன் எஸ்.சிவராஜேஸ்வரன் ஆகியோர் கலந்துகொள்வார். (1-135)


## தேவை

ஸ்ருடியோவில் வேலை பழக ஆண்களும் கசியர் வேலைக்கு பெண்களும் தேவை.

392, பிரதான வீதி, யாழ்ப்பாணம்.

நேரில்: 077 6594616 (சி-53035)

## மணமகள் தேவை

யாழ்.இந்து கௌரவ குடும்பத்தைச் சேர்ந்த 1977ஆம் ஆண்டு பூராட நட்சத்திரம், முதலாம் பாதம், 4இல் செவ்வாய் இலக்கண பாவம் 25, மொத்தப் பாவம் 45ஐக் கொண்ட உபஅதிபராகக் கடமையாற்றும் மணமகனுக்கு அரச உத்தியோகம் அல்லது படித்த மணமகள் தேவை.

தொடர்புகளுக்கு: [illegible]

தொலைபேசி இல. 021 - 222 3885, 077-6630333 (62930)

## CD கள் மூலம் Spoken English

வீட்டில் இருந்தவாறே ஆங்கிலம் பேச கற்றுக்கொள்ள சகல அடிப்படை பாடத்திட்டங்களும் பயிற்சிகளும் இலகுவான முறையில் தமிழ்மொழி மூலம் 4 A C D கள் + 20 VCD களில் உள்ளடக்கப்பட்டுள்ளது. பாடசாலை மாணவர்கள், பல்கலைக்கழக மாணவர்கள், வேலையை எதிர்பார்ப்போர், வீட்டில் இருக்கும் பெண்கள், ஆங்கில வகுப்புக்குச் செல்ல கூச்சப்படும் வயது வந்தோர் ஆகியோருக்கு மிகவும் உகந்தது. ஆங்கில ஆசிரியர்களுக்கும் வழிகாட்டியாக அமையும். பெற்றோர் தங்கள் பிள்ளைகளுக்கு கற்பிக்கலாம். குடும்பமாகவும் ஆங்கிலம் பேச கற்றுக்கொள்ளலாம். முயற்சி உடையவர்கள் இதன்மூலம் நிச்சயமாக ஆங்கிலம் பேச கற்றுக்கெள்ளலாம.

முன்பதிவுகள் செய்து கொள்வதன் மூலமே பெற்றுக்கொள்ள முடியும்

*முன்பதிவுகள் நடைபெறுகின்றன. முன்பதிவுசெய்யும் இடங்கள*

| | |
|---|---|
| பூபாலசிங்கம் புத்தகசாலை, பஸ் நிலையம், யாழ்ப்பாணம். | கத்தோலிக்க விற்பனை நிலையம் (பஸ்தியன் சந்தி) 360, பிரதான வீதி, யாழ்ப்பாணம். 021 222 9041 |
| காருண்யா வைத்திய நிலையம், சிவன் பண்ணை வீதி, யாழ்ப்பாணம். 021 222 3795 | காவேரி பார்மசி, கொக்குவில் சந்தி, கொக்குவில். |
| ராஜலஷ்மி மல்ரி பலஸ், நெல்லியடி, கரவெட்டி. (பஸ் நிலையத்திற்கு முன்னால்) | மெடிலான்ட் பார்மசி, ஆலடி சந்தி, மானிப்பாய். |
| றேனி மூக்கு கண்ணாடி அகம், கண்டி றோட், (AGA's Office அருகில்) சாவகச்சேரி. | Thurka Book shop, Bus stand Chunnagam. 021 222 6267 |
| றேனி மூக்கு கண்ணாடி அகம், 88, பிரதான வீதி, பருத்தித்துறை. | மெடிலான்ட் பார்மசி, பிரதான வீதி, சங்கானை. |

## JAFFNA SOCIAL ACTION CENTER

JSAC

159, 4th Cross Street, Jaffna.

**Vacancy for the post of Case Manager (Female)**

Applications are invited for the post of Case Manager from the suitable candidates with the following qualifications,

1. Abide by rules of confidentiality.
2. Psychosocial skill back ground with good leadership.
3. Excellent written & spoken English.
4. Strong organizational and computer skills.
5. To compile and maintain complete case history of all incoming residents
6. Commitment to issues concerning SGBV / domestic violence, women, children and Jaffna community.
7. Valid Motor bike driving license.

Applications should be forwarded to **Co-ordinator, Jaffna Social Action Centre, 159, 4th Cross Street, Jaffna** to reach this on or before 1st of August 2007. Should mention on the left corner of the envelope "Application for the Post of Case Manager"

**Co - ordinator**

**JSAC**

(C/53034)


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உதயன்
தொலைபேசி 222 3837, 222 9933 தொலைநகல்.: 222 9944

# பண்டா - செல்வா ஒப்பந்தத்துக்கு இன்றுடன் 50 ஆண்டுகள் பூர்த்தி

வாழ்வியல் உரிமைகளுக்காகவும், நீதி, நியாயம், சமத்துவம் வேண்டியும் ஈழத் தமிழர்கள் கடந்த ஆறு தசாப்த காலமாக நடத்தி வரும் பல்பரிமாணப் போராட்டங்களை நோக்குபவர்கள் அவை இரண்டு தடங்களில் விரிந்து செல்வதைக் காண்பர்.

ஒருபுறம் அஹிம்சை வழியிலும், பின்னர் ஆயுத முனையிலும் வெடித்த போராட்டக் களங்களாகவும், மறுபுறம் அமைதி முயற்சிகள் என்ற பெயரில் காலத்துக்குக் காலம் இடம்பெற்ற சமாதான அரங்குகளாகவும் இரு முனைகளில் அந்த வரலாற்றுத்தடம் நகர்ந்து சென்றிருக்கின்றது.

அவ்வப்போது ஆட்சிக்கு வந்த சிங்களப் பேரினவாத அரசுகளோடு தமிழர் நடத்திய அமைதிப் பேச்சுகள், சிறுபான்மையினரைப் பெரும்பான்மையினர் நம்ப வைத்து ஏமாற்றிய நம்பிக்கைத் துரோக நாடகங்களின் அத்தியாயங்களாகக் கழிந்திருக்கின்றன.

அத்தகைய் பெரும் வரலாற்றுத் துரோகத்தின் முக்கிய கட்டம் அரங்கேறியதன் ஐம்பதாவது ஆண்டை இன்று நாம் பூர்த்தி செய்கின்றோம்.

ஆம். பண்டா - செல்வா ஒப்பந்தம் என்ற நம்பிக்கையைத் தமிழருக்கு சிங்களம் வழங்கி இன்று சரியாக ஐம்பது ஆண்டுகள் பூர்த்தியாகின்றன. அன்றிலிருந்து சரியாக எட்டரை மாதத்தில் அந்த ஒப்பந்தம் சிங்களத் தலைமையினால் - கையொப்பமிட்டு உறுதியளித்த அப்போதைய பிரதமர் எஸ். டபிள்யூ. ஆர். டி. பண்டாரநாயக்காவினாலேயே - கிழித்து வீசப்பட்டது. ஈழத் தமிழர்களின் அரசியல் போராட்ட சரித்திரத்தில் மீண்டும் ஒரு தடவை பேரினவாதிகளினால் அவர்கள் ஏமாளிகளாக்கப்பட்டனர்.

பண்டா - செல்வா ஒப்பந்தம் கைச்சாத்தாகி சரியாக அரைநூற்றாண்டு பூர்த்தியாகும் இச்சமயத்தில் அந்த வரலாற்றுப் பின்னணியை ஒரு தடவை மீட்டுப் பார்ப்பது பொருத்தமானதாக இருக்கும்.

இந்த அரசியல் குளறுபடிகளுக்கு எல்லாம் மூலகாரணரான எஸ். டபிள்யூ. ஆர். டி. பண்டாரநாயக்கா தமது கொள்கை நிலைப்பாட்டில் அவ்வப்போது குத்துக்கரணம் அடிக்கும் சராசரி மூன்றாந்தர அரசியல்வாதி போன்றே நடந்துகொண்டவர். இலங்கைத்தீவு இத்துணை மோசமான கட்டத்தில் தவிப்பதற்கு மூலகர்த்தா அவரே என்றால் அது மிகையாகாது.

1925, 26 களில் இளம் அரசியல்வாதியாக பொதுவாழ்க்கைக்குள் நுழைந்த சமயம் இலங்கையில் சமரசம் பேணப்படுவதற்கு சமஷ்டியே உகந்த - உயர்ந்த - வழிமுறை எனத் துணிந்தும், வலுவாகவும் குரல் எழுப்பிய பண்டா, முப்பது ஆண்டுகள் கழித்துத் தாம் ஆட்சித் தலைவராக வந்தபோது பௌத்த - சிங்களப் பேரினவாத மாயையின் பிடிக்குள் முற்றாகச் சிக்குண்டு, அதற்கு சரணாகதி அடைந்து, தாம் வலியுறுத்திய சமஷ்டிக் கோட்பாட்டைத் தாமே நிராகரித்தார். ஆட்சியைப் பிடிப்பதற்கு வசதியாக இனவாதத்தை அப்போது அவர் கையிலெடுத்தார். நாடு முழுவதிலும் சிங்களம் மட்டுமே அரச மொழி என்ற சட்டத்தை 24 மணி நேரத்தில் கொண்டுவருவேன் என்ற அவரது பேரினவாதக் கூச்சல் தென்னிலங்கையில் நன்கு எடுபட்டது. 1956 தேர்தலில் அவரது தலைமையிலான மக்கள் ஐக்கிய முன்னணி அதனால் தெற்கில் வெற்றிவாகை சூடியது.

அத்தேர்தலில் தென்னிலங்கை ஒருபுறமாகவும் வடக்கு - கிழக்கைத் தளமாகக் கொண்ட தமிழர் தாயகம் மறுபுறமாகவும் இனமுரண்பாட்டு அடிப்படையில் துருவமயப்பட, தமிழர் தாயகத்தில் சமஷ்டி அடிப்படையிலான அதிகாரப் பரவலாக்கலுக்குக் குரல் எழுப்பிய தமிழரசுக்கட்சி பெரு வெற்றியீட்டியது.

ஆட்சிக்கு வந்த பண்டா அரசு சிங்கள மட்டும் சட்டத்தை நாடு முழுவதும் நடைமுறைப்படுத்த அதற்குப் பதிலடியாகத் தமிழரசுக்கட்சி தமிழ் இனம் தன்னாட்சியுடன் இயங்கக் கூடிய தான சமஷ்டி ஆட்சி வடிவத்தைத் தமிழர் தாயகத்தில் நிலைநிறுத்தக் கோரி வெகுசனப் போராட்டங்களைப் பரவலாக நடத்துவதற்குப் பொங்கி எழுந்தது.

தமிழ் மக்களின் தன்னாட்சி சமஷ்டி வடிவக் கோரிக்கைக்கு 1956 பொதுத் தேர்தலில் தமிழர் தாயகத்தில் தெளிவான ஆணை கிடைத்ததால் வீறுகொண்ட தமிழரசுக்கட்சி அதற்காகத் தனது சத்தியாக்கிரகப் போராட்டங்களையும் சட்டமறுப்பு இயக்கங்களையும் தீவிரப்படுத்தத் தீர்மானித்தது.

இவ்வாறு தமிழினம் அரசியல் தன்னாட்சிக்கான உரிமையைக் கோரி தமிழ்த் தேசிய உணர்வோடு எழுச்சி பெற்றமை பண்டாரநாயக்காவின் சிங்கள ஆட்சிப்பீடத்தை அதிரவைத்தது. மடை திறந்த வெள்ளமாக பீறிட்டுப் பாய்ந்து சீறி வரும் தமிழரின் எழுச்சிமிகு வெகுசனப் போராட்டத்தை அரண்கட்டி, மறிக்க எண்ணிய பண்டாரநாயக்கா அதற்காகத் தந்திரம் செய்தார். தமிழர் ஏமாற்று நாடகம் அரங்கேறியது.

தமிழர் தந்தை செல்வநாயகத்துடன் பிரதமர் பண்டாரநாயக்கா நேரடியாகப் பேசினார். சமரச உடன்பாட்டுக்கான இறுதிப் பேச்சுகள் 1957 ஜூலை 25 இரவு 7 மணிக்கு ஆரம்பமாகின. அடுத்த நாள் அதிகாலை 2 மணிக்கு - அதாவது இற்றைக்கு சரியாக ஐம்பது ஆண்டுகளுக்கு முன் - ஜூலை 26 ஆம் திகதி இணக்கம் எட்டப்பட்டது.

முழு சமஷ்டி வடிவம் இல்லாவிட்டாலும் பிரதேச மன்றங்கள் ஊடாகத் தமிழருக்கு ஓரளவு தன்னாட்சி அதிகாரங்களை வழங்கவும், தமிழ்ப் பகுதிகளில் சிங்களக் குடியேற்றங்களை நிறுத்தவும் இணங்கித் தந்தை செல்வாவுடன் ஒப்பமிட்டார் பண்டா. ஆனால் அதன்பின் நடந்தது என்ன?

தமிழருக்கு சற்றேனும் அதிகாரம் பகிரப்பட வாய்ப்பு ஏற்பட்டதைக் கண்டு சிங்களம் பொங்கிக் கொதித்து எழுந்தது. இனவாத சக்திகள் பேரெதிர்ப்புக்காக ஒன்று திரண்டன. ஜே. ஆர். ஜெயவர்த்தனா தலைமையில் மேற்படி ஒப்பந்தத்துக்கு எதிராக 'கீர்த்திமிக்க' - கண்டியை நோக்கிய - கால்நடை ஊர்வலம் நடத்தப்பட்டது. அதனால் தூண்டப்பட்டு, எழுச்சி பெற்ற சிங்களப் பேரினவாதம் 1958, ஏப்ரல் 9 ஆம் திகதி பிரதமர் பண்டார நாயக்காவின் உத்தியோகபூர்வ இல்லத்தை முற்றுகையிட்டது. சுமார் இருநூறு பிக்குகள் உட்பட ஐநூறு இனவெறி ஆதரவாளர்களைக் கொண்ட அந்தப் பேரணி பண்டா - செல்வா ஒப்பந்தத்தின் பிரதியை சவப்பெட்டி ஒன்றில் வைத்து இறுதி ஊர்வலமாக பண்டாவின் இல்லம்வரை கொண்டு சென்றது. அங்கு வைத்து சவப்பெட்டித் தகனத்தை உணர்ச்சி ஆரவாரத்தோடு அது நிறைவேற்றியது.

அந்தப் பேரினவாதக் காட்டுக்கூச்சலுக்கு அடிமையாகி, அடிபணிந்த பிரதமர் பண்டாரநாயக்கா, அந்தக் கூட்டத்தின் முன்னால் வந்து நின்று, பண்டா - செல்வா ஒப்பந்தத்தின் ஒரு பிரதியைக் கிழித்தெறிந்து ஒப்பந்தம் செத்துவிட்டது எனப் பிரகடனம் செய்தார்.

சிங்களத் தலைமை அன்று புரிந்த இந்த மாபெரும் நம்பிக்கைத் துரோகமே இத்தீவில் இன ஒருமைப்பாட்டுக்கும் தேசிய நல்லிணக்கத்துக்கும் நிரந்தரமாகவே சாவுமணி அடித்தது. தமிழர் தேசம், சிங்களவர் தேசம் ஆகியவற்றுக்கு இடையே நிரந்தரப் பகை உண்டாக அதுவே காரணமாயிற்று.

பண்டா - செல்வா ஒப்பந்தம் கிழித்தெறியப்பட்ட கையோடு, அதனால் பீறிட்டு எழுந்த பேரினவாத உணர்வு பெரும் வன்முறைக் கலவரமாகத் தமிழர் மீது பொறிந்தது.

அதன் தொடர் அங்கங்களே இப்போது பெரும் யுத்தமாக அரங்கேறிக் கொண்டிருக்கின்றன.

# மன்னாரில் புலிகளின் போர் அணிகள் குவிப்பு ஓமந்தை, மணலாறில் படையினர் ஆயத்தம்

## வடக்கில் இருதரப்புகளும் பெரும் போருக்குத் தயார்

கொழும்பு,ஜூலை 26

வடக்கில் பெரும் போருக்கு இராணுவமும், விடுதலைப் புலிகளும் தயாராகி வருவதாக பாதுகாப்புத் தகவல்கள் தெரிவிக்கின்றன.

மன்னாரில் விடுதலைப் புலிகளின் போர் அணிகள் குவிக்கப்படுவதாகவும், ஓமந்தை, மணலாறில் படையினர் தாக்குதல்களை த் தொடங்குகியிருக்கின்றனர். என்றும் 'லக்பிம நியூஸ்' ஆங்கில வார இதழில் (22.07.07) 'டிபென்ஸ் டயறி' என்ற பாதுகாப்புப் பத்தியில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

அதில் தெரிவிக்கப்பட்டிருப்பதாவது:-

கடந்த வெள்ளிக்கிழமை 1,000 தொடக்கம் 1,200 வரையிலான விடுதலைப் புலிகள் கிளிநொச்சியில் ஒன்று கூடியிருந்தனர். இருபுறமும் உள்ள அவர்களது முன்னணி பாதுகாப்பு நிலைகளுக்கு அவர்கள் நகர்த்தப்பட்டனர். பெருமளவிலான விடுதலைப் புலிகள் மன்னாரை நோக்கி நகர்த்தப்படுவதாக புலனாய்வுத் தகவல்கள் தெரிவித்துள்ளன. வன்னியின் எல்லைப்புறங்களின் பாதுகாப்பும் அதிகரிக்கப்பட்டுள்ளது.

மகளிர் படையணியான சோதியா படையணி மல்லாவியில் நிலை கொண்டுள்ளது. இந்த எல்லா நிகழ்வுகளும் போர் வடக்கு நோக்கி நகர்வதையே கட்டியம் கூறுகின்றது. குறிப்பாக இது ஓமந்தைக்கு மேற்காகவும் மணலாறு நோக்கியதாகவும் உள்ளது. இந்த ஆயத்தங்களுக்கு மத்தியிலும் விடுதலைப் புலிகள் வெள்ளிக்கிழமை அதிகாலை 2.30 மணியளவில் மன்னாரின் நீலச்சேனையில் உள்ள இராணுவ நிலைகள் மீது தாக்குதலை நடத்தியுள்ளனர்.

இந்தத் தாக்குதல் நடைபெறும் போது உயிலங்குளத்தில் உள்ள 21 ஆவது படையணியின் 5 ஆவது பிரிக்கேட்டின் தலைமையகம் மீது கடுமையான எறிகணை வீச்சுக்களும் நடத்தப்பட்டுள்ளன. இது தாக்குதல் நடைபெற்ற பகுதிக்கு மேலதிக படையினரை அனுப்புவதை தடுக்கும் உத்தியாகும். இதுவும் ஓமந்தைக்கு மேற்குப் பகுதியில் நடைபெற்று வரும் மோதல்களின் தொடர்ச்சியாகும்.

தம்பனை, பெரிய தம்பனைப் பகுதியில் அண்மையில் நடைபெற்ற மோதல்களில் விடுதலைப் புலிகளின் எதிர்ப்பு கடுமையாக இருந்தது. இதில் 10 படையினர் பலியானதுடன் 5 பேர் காணாமல் போயிருந்தனர். இவர்களில் இருவர் பின்னர் தளத்திற்கு திரும்பியிருந்தனர். ஒருவரின் சடலத்தை படையினர் கண்டெடுத்ததுடன், இருவரின் சடலங்களை விடுதலைப் புலிகள் அனைத்துலக செஞ்சிலுவைச் சங்கத்திடம் கையளித்திருந்தனர்.

கிழக்குப் பகுதியில் நடைபெறும் படை நடவடிக்கை முடிவுற்றதும் படையினர் வட போர்முனையின் முன்னணி நிலைகளில் செறிவாக்கப்படுவார்கள் என இராணுவத் தளபதி லெப். ஜெனரல் சரத் பொன்சேகா நேர்காணல் ஒன்றில் தெரிவித்திருந்தார்.

### இராணுவத்தின் 57 ஆவது படையணி தாக்குதல்

படையினர் ஓமந்தைக்கு மேற்காக உள்ள முன்னணி நிலைகளை அண்டிய பகுதிகளிலும், மணலாற்றின் முன்னணி நிலைகளிலும் நடவடிக்கைகளில் ஈடுபட்டு வருகின்றனர். வவுனியா கல்மடுவை தளமாகக்கொண்டு அமைக்கப்பட்ட இராணுவத்தின் 57 ஆவது புதிய படையணி தாக்குதலில் ஈடுபட்டு வருகின்றது.

இந்தப் படையணி முன்னர் நடத்திய தாக்குதல்களுக்கு அதிர்ச்சிகரமான பதிலடியை விடுதலைப் புலிகள் முள்ளிக்குளம், விளாத்திக்குளம் பகுதிகளில் வழங்கியிருந்தனர். இந்தத் தாக்குதலின் போது பம்பைமடுவில் அமைந்திருந்த பீரங்கிப் படை கடுமையாக பீரங்கித் தாக குதலுக்கு உள்ளாகியிருந்தது.

விடுதலைப் புலிகள் தமது படையணிகளையும், கனரக ஆயுதங்களையும் மன்னாரை நோக்கி நகர்த்தி வருவதாக இராணுவ மற்றும் பொதுமக்கள் தரப்பு தகவல்கள் தெரிவிக்கின்றன.

விடுதலைப் புலிகளின் மரபுவழி போர் வலுவை அழிப்பதுதான் படையினரின் நோக்கம். கிழக்கு படை நடவடிக்கையில் விடுதலைப் புலிகளின் தப்பிச் செல்லும் வழிகளை தடைசெய்யும் நோக்குடன் வாகரை, கதிரவெளி காட்டுப்பகுதிகளில் படையினர் குவிக்கப்பட்டனர். பின்னர் சிறப்புப் படையணியின் படைப்பிரிவுகள் குடுமிமலை மீதான நடைவடிக்கைக்கு பயன்படுத்தப்பட்டன.

புதிதாக உருவாக்க உத்தேசிக்கப்பட்டுள்ள 58 ஆவது படையணியை மணலாற்றில் நடவடிக்கையில் ஈடுபடுத்தவும் திட்டமிடப்பட்டுள்ளது. சிறிலங்கா இராணுவம் புதிய கவசத்தாக்குதல் படையணியையும் உருவாக்கி வருகின்றது. இந்த படைப்பிரிவின் மூன்றாவது றெஜிமெண்ட் இந்த மாதத்தின் முற்பகுதியில் பயிற்சியை முடித்துக்கொண்டு வெளியேறியுள்ளது.

முன்னைய படை நடவடிக்கைகளின் போது சில சந்தர்ப்பங்களில் படையினரின் நகர்வுத்திறன் குறைவாக இருந்ததனால் கவசத்தாக்குதல் படைப்பரிவு உருவாக்கப்பட்டுள்ளது. எனினும் நாகர் கோவில், முகமாலை களமுனைகளில் படையினர் பெரும் டாங்கிப் படை நடவடிக்கையை மேற்கொள்வது சாத்தியமற்றது. கடந்த ஆண்டு ஒக்ரோபர் மாதம் நடைபெற்ற சமரில் டாங்கிப்படை கடுமையான இழப்புக்களை சந்தித்திருந்தது குறிப்பிடத்தக்கது.

இந்தப் படையணியின் தாக்குதல் ஆயுதங்கள் அதன் வாகனங்களிலேயே பொருத்தப்பட்டிருக்கும். இயந்திரத் துப்பாக்கிகள், தானியங்கி பீரங்கிகள், நேரடியான சூடுகளை வழங்கும் சிறிய ரக ஹெவிச்சர் பீரங்கிகள் போன்றன அந்த வாகனங்களில் பொருத்தப்பட்டிருக்கும் என்று அதில் தெரிவிக்கப்பட்டுள்ளது. - என்று 'டிபென்ஸ் டயறி'யில் விவரிக்கப்பட்டுள்ளது. (அ)

# வடக்கு - கிழக்கை மீண்டும் இணைத்து அதிகாரத்தைப் பகிர்ந்தளிக்க வேண்டும்

## அடித்துக் கூறுகிறார் அமைச்சர் அனுரா பண்டாரநாயக்க

கொழும்பு, ஜூலை 26

வடக்கு - கிழக்கு பிரதேசங்கள் மீண்டும் இணைக்கப்பட வேண்டும். அதிகாரம் தமிழ், முஸ்லிம் மக்களுக்கு பகிர்ந்து அளிக்கப்பட வேண்டும். யுத்தத்தின் மூலம் அமைதியைத் தோற்றுவிக்க முடியாது.

இவ்வாறு அடித்துக் கூறியிருக்கிறார் தேசிய மரபுரிமைகள் துறை அமைச்சர் அனுரா பண்டார நாயக்க.

குடுமிமலை கைப்பற்றப்பட்டுள்ள போதிலும் புலிகள் தோற்கடிக்கப்படவில்லை. அவர்களிடம் இன்னமும் கனரக ஆயுதங்கள் இருக்கின்றன. அவர்கள் எந்நேரமும் தாக்குதல்களை நடத்தக் கூடும். போர் முடிவுக்கு கொண்டு வரப்பட வேண்டும். அரசியல் தீர்வு ஒன்றைக் கண்டுபிடிக்க வேண்டும் என்று அனுரா பண்டார நாயக்க மேலும் கூறினார்.

கடவத்தையில் கிரில்லாவெவ மகா வித்தியாலயத்தில் இடம்பெற்ற "நெனபாஹான" கல்விக் கண்காட்சி நிகழ்வில் கலந்துகொண்டு உரை நிகழ்த்தியபோதே அமைச்சர் அனுரா பண்டார நாயக்க இக் கருத்துக்களை வெளியிட்டார்.

ஜனாதிபதி மஹிந்த அரசாங்கத்தில் முக்கிய அமைச்சரும் முன்னாள் ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்கவின் சகோதரருமான அனுரா பண்டார நாயக்க மேலும் பேசுகையில் கூறியதாவது:-

நாடு செழித்து வருவதாக சில அமைச்சர்கள் கூறி வந்த போதிலும் அரசாங்கம் வீண் செலவுகளையும் அளவுக்கு அதிகமாக வாகனங்களைப் பயன்படுத்துவதையும் நிறுத்திக்கொள்ளாது போனால், மக்கள் அவர்களை உதைத்துத் துரத்திவிடுவார்கள்.

### மக்களிடம் மன்னிப்புக் கோருங்கள்

எனது அன்னையாரின் காலத்தில் வாழ்க்கைச் செலவு மூன்று வீதமாகவிருந்தது. இப்பொழுது அது 45 வீதமாக உயர்ந்துவிட்டது. மக்கள் அரசாங்கம் மீதான மயக்கத்திலிருந்து விடுபட்டுவிட்டார்கள். எனவே எமது குறைகளை ஏற்றுக்கொண்டு மக்களிடம் மன்னிப்புக் கோரவேண்டும்.

அநேகர் தம்மை சிறிலங்கா சுதந்திரக்கட்சிக்காரர் என்று சொல்லிக்கொள்ளவே இன்று விரும்புகிறார்கள் இல்லை. வாழ்க்கைச் செலவு மிகவும் அதிகரித்துவிட்டது என்று எல்லாருமே கூறுகிறார்கள்.

1960 இல் மஹர சுதந்திரக் கட்சியின் கோட்டையாக இருந்தது. எதிர்காலத்தில் நாம் அகத்தனகலையில் வென்றாலும்கூட பெரும்பான்மை பெரிதாகவிருக்காது. மக்கள் வெறுப்படைந்துள்ளார்கள்.

எனது தந்தையார் சுதந்திரக் கட்சியைத் தோற்றுவித்ததிலிருந்து கம்பஹா மாவட்டம் எமது கட்சியின் கோட்டையாக இருந்து வந்துள்ளது. கம்பஹா மாவட்டத்திலிருந்து ஐந்த அரசுத் தலைவர்கள் தேர்ந்தெடுக்கப்பட்டிருந்துள்ளார்கள். முதலில் என் தந்தை கொலை செய்யப்பட்டார். பின்னர் என் தாயார் குடியுரிமை இழந்தார். எனது சகோதரி ஒரு கண்ணை இழந்தார். இவ்வாறு பல துன்பங்களை நாம் அனுபவித்த போதும் எவருக்கும் நாம் துன்பமிழைக்கவில்லை. ஆனால் ஜே. ஆர்.ஜெயவர்த்தனா பதவிக்கு வந்ததும் தமிழ் மக்கள் கொல்லப்பட்டார்கள்.



நாங்கள் 13 ஆண்டுகள் பதவியிலிருந்துள்ளோம். எனது சகோதரி 12 தேர்தல்களில் வெற்றிபெற்றுள்ளார்.

யுத்தம் காரணமாக வாழ்க்கைச் செலவு ரொக்கட் வேகத்தில் உயர்ந்துவிட்டது.

இப்பொழுது எமது சகோதரியின் சேவை எமக்குத் தேவைப்படுகின்றது. புத்தபெருமான் எழுந்தருளப்பெற்ற இந்த நாட்டில் மீண்டும் சுதந்திரக்கட்சி புதிய சகாப்தம் ஒன்றை உருவாக்கித் தருவதாக - எனறு கூறினார்.

மேல் மாகாண சபையால் ஒழுங்கு செய்யப்பட்டிருந்த இக் கூட்டத்தில் பயணிகள் போக்குவரத்து அமைச்சர் லசந்த அழகியவன்ன மற்றும் மேற்கு மாகாண முதலமைச்சர் றெஜினால்ட் குறே ஆகியவர்களும் கலந்துகொண்டனர். (அ-ப)

# நாளை

| ஆடி - 11 | வெள்ளிக்கிழமை |
|---|---|
| | 27.07.2007 |
| திதி : துவாதசி | காலை 07.15 |
| நட்சத்திரம்: மூலம் பின்னிரவு | 02.02 |
| சுபநேரம் | : 06.02 - 07.32 |
| ராகுகாலம் | : 10.32 - 12.02 |

# பங்கீட்டு அட்டைக்கு சம்பா அரிசி விநியோகம்

பண்டத்தரிப்பு ப.நோ.கூ.சங்கம் பங்கீட்டு அட்டைக்கு சம்பா அரிசியை கிலோ 52 ரூபா வீதம் சங்கக் கிளைகள் ஊடாக விநியோகம் செய்து வருகின்றது.

ஓர் அங்கத்தவரைக் கொண்ட பங்கீட்டு அட்டைக்கு ஒரு கிலோ வீதமும், 2 அங்கத்தவரை கொண்ட பங்கீட்டு அட்டைக்கு 2 கிலோ வீதமும் இந்த சம்பா அரிசி விநியோகிக்கப்பட்டு வருவதாக சங்க பொது முகாமையாளர் தெரிவித்தார்.

இதேவேளை, 400 கிராம் நிறையுள்ள லக்ஸ்பிறே பக்கற் ஒன்று பழைய விலையான 158 ரூபாவுக்கே சங்கக் கிளைகளில் விநியோகம் செய்யப்பட்டு வருவதாகவும் அவர் மேலும் தெரிவித்தார். (1-135)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கனிஷ்ட ஊழியர்கள் 20 பேருக்கு பதவி உயர்வுடன் நியமனம்

கைதடி, ஜூலை 26

மாகாண அரசாங்க சேவையின் கனிஷ்ட ஊழியர்களை மாகாண முகாமை உதவியாளர் சேவை தரம் III இக்கு பதவி உயர்த்துவதற்கான போட்டிப் பரீட்சையில் சித்தியடைந்தவர்களின் விவரம் வெளியிடப்பட்டுள்ளது.

சித்தியடைந்தவர்களை எதிர்வரும் முதலாம் திகதி அவரவருக்கு ஒதுக்கப்பட்ட திணைக்களத்தில் பதவியேற்குமாறு அறிவுறுத்தப்பட்டுள்ளனர்.

நியமனக் கடிதம் கிடைப்பதில் தாமதம் ஏற்பட்டாலும் குறித்த தினத்தில் பதவியேற்குமாறு கேட்கப்பட்டுள்ளது.

நியமனம் பெறுபவர்கள் மற்றும் அவர்களுக்குக் குறித்தொதுக்கப்பட்ட திணைக்களங்களின் விவரம் வருமாறு:-

பாலசுப்பிரமணியம் திருச்செல்வன் - வடமாகாண கூட்டுறவு ஊழியர் ஆணைக்குழு, திருகோணமலை, இராசரத்தினம் கிருபானந்தன் - பருத்தித்துறை நகரசபை, பொன்னுத்துரை கிருஷ்ணகுமார் - நல்லூர் பிரதேச சபை, கதிரவேற்பிள்ளை கணநாதன் - காரைநகர் பிரதேச சபை, தங்கராஜா சிவலோகராஜா-வல்வெட்டித்துறை நகர சபை, சிதம்பரப்பிள்ளை நந்தகுமார் - யாழ்ப்பாணம் மாநகர சபை, முத்துக்குமாரசுவாமி தயாபரன் - முல்லைத்தீவு உள்ளூராட்சி உதவி ஆணையாளர் அலுவலகம், திருமதி தயாமோகன் தயாளினி - வலி.தென்மேற்குப் பிரதேசசபை, சிவஞானசுந்தரம் சிவநாதன் - பருத்தித்துறை நகரசபை, நவரத்தினம் மோகனரூபன் - வேலணை பிரதேச சபை.

இராசையா தயானந்தன் - வலிகாமம் வலயக் கல்வி அலுவலகம், குமாரமூர்த்தி விஜயகுமார் - வேலணை பிரதேச சபை, பரமநாதன் மோகனராசன் - யாழ்ப்பாணம் விவசாய விரிவாக்க அலுவலகம், கேதீஸ்வரன் ஆதித்தன் - வடமாகாண பொது நிர்வாக அமைச்சு, திருகோணமலை, மகேந்திரன் பிரதீபன் -வடமாகாணப் பொது நிர்வாக அமைச்சு, திருகோணமலை, செல்வராஜா ஜெயபவான் - சாவகச்சேரி நகர சபை, இராஜலிங்கம் சித்திரா - வலி.கிழக்கு பிரதேச சபை, உமா ரவீந்திரநாதன் - யாழ்ப்பாணம் மாநகர சபை, நாகராசா மோகனகரன் - யாழ்ப்பாணம் வலயக் கல்வி அலுவலகம், சுதர்சினி சுரேஸ்குமார்- வலி.தென் மேற்குப் பிரதேச சபை. (1-75)

# மேலும் ஒரு சிப்பாய் நேற்று உயிரிழப்பு

கொழும்பு,ஜூலை 26

வவுனியாவில் நேற்றுமுன்தினம் படையினர் பஸ் மீது நடத்தப்பட்ட கிளைமோர் தாக்குதலில் காயமடைந்த படையினரில் மற்றொருவர் நேற்று உயிரிழந்தார். இவர்களுடன் இச்சம்பவத்தில் உயிரிழந்தவர்களில் எண்ணிக்கை 12 ஆக உயர்ந்துள்ளது. (சி)

## நேற்றைய...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

கள் நடமாட்டம் குறைந்து காணப்பட்டது. எனினும், நண்பகலுக்கு சற்று முன்னர் நகரில் உள்ள வர்த்தக நிறுவனங்கள் திறக்கப்பட்டும், பஸ் போக்குவரத்துக்கள் அதிகரித்தும் இருந்ததால் மக்கள் நடமாட்டம் கணிசமாகக் காணப்பட்டது.

பாடசாலைகளில் உயர்தர வகுப்புகளின் மாணவர்கள் குறைவாகக் காணப்பட்டனர். எனினும் கனிஷ்ட வகுப்புக்களுக்கான தவணைப் பரீட்சைகள் இடம்பெற்றதால் மாண வர் வரவு வழமைபோல் இருந்தது.

யாழ்.பல்கலைக்கழகம், தொழில் நுட்ப நிறுவனங்களின் மாணவர்கள் சமுகமளிக்காததால் அங்கு விரிவுரைகள் இடம்பெறவில்லை.

அரச அலுவலகங்களுக்கு ஊழியர்கள் சமுகமளித்திருந்த போதிலும் நண்பகலுடன் பெரும்பாலானோர் வீடு திரும்பி விட்டார்கள்.

யாழ்.ஆஸ்பத்திரிக்கு குறைந்தளவு நோயாளர்களே வந்திருந்தனர். அரச திணைக்களங்கள், வங்கிகளுக்கு பொதுமக்கள் வரவு குறைந்து காணப்பட்டது.

வடமராட்சியில் காலையில் பாடசாலைகள், வர்த்தக நிறுவனங்கள் மூடப்பட்டிருந்தன. மக்கள் நடமாட்டம் குறைந்த காணப்பட்டது.

தென்மராசியில். கடைகள், சந்தைகள் பாடசாலைகள் இயங்கின.

வலிகாமத்தின் பல பகுதிகளிலும் காலையில் கடைகள் மூடப்பட்டும், போக்குவரத்து குறைந்தும் சனநடமாட்டம் குன்றியும் காணப்பட்டது. ஆயினும் நண்பகல் அளவில் யாவும் சராசரி நிலைக்குத் திரும்பின. மொத்தத்தில் குடாநாட்டின் சகல பகுதிகளிலும் இயல்பு வாழ்க்கை பெரிதும் பாதிக்கப்பட்டிருந்தது.

(ஆ-1-111-68-29-155-207)

## கொழும்பில்....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

சிறிபதி சூரியாராய்ச்சி உட்பட பல முக்கியஸ்தர்கள் உரையாற்றவிருக்கின்றனர்.

இரு அணிகளினதும் எதிர்காலத் திட்டங்கள் தொடர்பாக இரு கட்சிகளினதும் பிரமுகர்கள் தமது உரைகளில் விளக்குவர் என்று தெரிவிக்கப்பட்டது.

இந்தப் பேரணியிலும் பொதுக்கூட்டத்திலும் சுமார் 5 லட்சம் ஆதரவாளர்கள் கலந்து கொள்வர் என்று ஏற்பாட்டாளர்கள் தெரிவித்தனர்.

### அரசின் பேரணி

ஆளும் தரப்பின் பிரதான பேரணியும் கூட்டமும் கொழும்பு லிப்டன் சதுக்கத்தில் நடைபெறுகின்றது. இதில் அரசின் முக்கிய தலைவர்கள் கலந்துகொண்டு உரையாற்றுகின்றனர். நாடு முழுவதிலும் 150 பேரணிகள் அரச தரப்பினால் நடத்தப்படும் என அறிவிக்கப்பட்டள்ளது.

அரசுத் தரப்பில் நடத்தப்படும் இன்றைய பேரணியில் அரசின் பங்காளிகளான சிறுபான்மைக்கட்சிகள் குறிப்பாக இ.தொ.கா., முஸ்லிம் காங்கிரஸ், ம.ம.முன்னணி போன்ற கட்சிகள் இந்தப் பேரணியில் கலந்து கொள்ளமாட்டா என்று அக்கட்சி வட்டாரங்கள் தெரிவித்தன. அரசு சார்பில், எதிர்க்கட்சிகள் சார்பில் என நடக்கும் இரண்டு பேரணிகளிலுமே தாங்கள் கலந்து கொள்ளப்போவதில்லை என இக்கட்சிகள் அறிவித்திருக்கின்றன.

இதேவேளை, கொழும்பில் இன்று இரு பிரதான கட்சிகளும் நடத்தும் பேரணிகளுக்கு பாதுகாப்பு வழங்குவதற்கு மேலதிக பொலிஸார் கடமையில் ஈடுபடுத்தப்படவிருக்கின்றனர். இருதரப்பு ஆதரவாளர்களுக்கிடையே முறுகல் நிலை ஏற்படவும், அது சிலவேளைகளில் மோதலாக வெடிக்கவும் வாய்ப்புகள் இருப்பதால் இந்த விடயத்தை எப்படிச் சமாளிப்பது என்று தெரியாமல் பொலிஸ் தலைமை குழம்பிப் போயிருப்பதாக விடயமறிந்த வட்டாரங்கள் தெரிவித்தன.

ஒரு மாதத்துக்கு முன்னரே தங்களால் திட்டமிட்ட பேரணியை குழம்புவதற்காகவே அரசுத்தரப்பும் இன்றைய தினத்தில் பேரணிகளை ஏற்பாடு செய்திருப்பதாக குற்றஞ்சாட்டியிருக்கும் ரணில் - மங்கள அணியினர், இந்த விடயத்தில் தமது பேரணிக்கு ஏதாவது இடையூறுகள் ஏற்படுத்தப்பட்டால் அதனால் பாரிய பின் விளைவுகள் ஏற்படும் என்றும் எச்சரித்திருக்கின்றமை குறிப்பிடத்தக்கதாகும். (சி)

## உயிர்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

குடாநாட்டில் உயிர் அச்சுறுத்தல் காரணமாக நீதிமன்றத்தில் சரண் அடைவோரின் எண்ணிக்கை அதிகரித்துவருகின்றது. அவர்களை யாழ்.சிறைச்சாலையில் வைத்துப் பராமரிப்பதில் பல நெருக்கடிகள் ஏற்படுகின்றன.

அவர்களை தங்கவைத்துப் பராமரிக்க தெல்லிப்பழை புனர்வாழ்வு நிலையத்தைப் பயன்படுத்த யோசனை முன்வைக்கப்பட்டது. பாதுகாப்புக் காரணங்களால் அந்த யோசனை நிறைவேற்றப்படவில்லை.

அதனையடுத்து -

புதிய ஏற்பாடு ஒன்றின் கீழ் அவர்களைப் பராமரிக்க வசதி செய்ய வேண்டும் என்று யாழ்.நீதிவான் இ.த.விக்னராஜா பிரதம நீதியரசரின் கவனத்துக்குக் கொண்டு வந்தார்.

யாழ்.நீதிமன்றத்துக்குச் சமீபமாக கட்டடம் ஒன்றைத் தெரிவு செய்து, சரண் அடைவோரை தங்கவைத்துப் பராமரிக்க ஏற்பாடு செய்யுமாறு பிரதம நீதியரசர், அமைச்சின் செயலாளருக்கு உத்தரவு பிறப்பித்துள்ளார். (அ-1)

## கிழக்கில்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

அனைத்து விதமான போரியல் உத்திகளையும் படைத்துறைத் தளபாடங்களையும் பயன்படுத்தப்போகிறோம்'' என்றும் இளந்திரையன் தமது செவ்வியில் குறிப்பிட்டார்.

தென் தமிழீழத்தை ஸ்ரீலங்காப் படைகள் கைப்பற்றியுள்ளன எனத்தெரிவிக்கும் கருத்துகள் முற்றிலும் அரசியல் நலன் சார்ந்தவை என அவர் சுட்டிக்காட்டினார்.

குடுமிமலையை ஸ்ரீலங்காப் படைகள் ஆக்கிரமித்தபோதும் தென் தமிழீழத்தில் தமது விடுதலை அமைப்பின் தளபதிகளும் மற்றும் படையணிகளும் தொடர்ந்து நிலை கொண்டுள்ளனர் எனவும் அவர் மேலும் குறிப்பிட்டார்.

குடுமிமலை ஒரு கேந்திர முக்கியப் பிரதேசம் அல்ல. நிலப்பகுதிகளிலிருந்து பின்னகர்வது தென் தமிழீழத்தை எமது இயக்கம் கைவிட்டதான அர்த்தம் அல்ல.

தென் தமிழீழத்தை ஸ்ரீலங்காப் படைகள் ஆக்கிரமித்திருக்கும்வரை அங்கு அமைதி நிலை தோன்றுவது சாத்தியம் இல்லை. அங்கு தேர்தல் ஒன்றை நடத்துவது இரத்தக் களரியில் முடியும் - என்றும் விடுதலைப் புலிகளின் படைத்துறைப் பேச்சாளர் இளந்திரையன் மேலும் தெரிவித்தார்.


மாகாண ஆசிரியர் தெரிவுப் போட்டிப் பரீட்சை வழிகாட்டல் விசேட கருத்தரங்கு

வியாழன் (இன்று) 1 - 4

வெள்ளி (நாளை) 9 - 3

* அச்சடிக்கப்பட்ட குறிப்புகள் கிடைக்கும்.

யாழ்ப்பாணக் கல்லூரி பட்டப்படிப்புகள் பிரிவு யாழ்.போதனா வைத்தியசாலை முன்பாக

G.A.Q. - யாழ். -கருத்தரங்கு

இ.நாகரிகம் -வியாழன் இன்று பி.ப 1-5 மணி

அரசறிவியல்- ஞாயிறு (28.07.2007) மு.ப 9-12

G.A.Q., B.A புதிய பிரிவுகள் ஆரம்பம்

A/L கொழும்பு (றோயல்) வினாத்தாள் இங்கு கிடைக்கும்.


## மூதூர்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

யும்இயங்கவில்லை. போக்குவரத்துச்சேவைகளும் இடம்பெறவில்லை. மக்களின் அவசர தேவைகள் தவிர, ஏனைய விடயங்களுக் காக வீதிக்கு வராமல் வீடுகளுக்குள்ளேயே முடங்கியிருந்து அரசின் உயர்பாதுகாப்பு வலயப் பிரகடனத்துக்கு தமது முழு எதிர்ப்பை வெளிப்படுத்தினர்.

இதனால் மேற்குறிப்பிட்ட மாவட்டங் களில் பிரதான வீதிகள், சந்தைகள் அனைத் துமே ஆள்கள் நடமாட்டம் இன்றி வெறிச் சோடின.

மன்னார் மாவட்டப் பொலிஸார், அப் பகுதி வர்த்தக நிலையங்கள் உடனடியா கத் திறக்கப்படாவிட்டால் அவற்றின் உரிமையாளர்கள் மீது சட்டரீதியான நட வடிக்கை மேற்கொள்ளப்படும் - என்று ஒலிபெருக்கிமூலம் நேற்றுக்காலை அறிவித்தனர். இருப்பினும் அதையும் செவிமடுக்காது மக்கள் ஹர்த்தாலுக்கு பூரண ஆதரவினை வழங்கியிருந்தனர் என்று தெரிவிக்கப்பட்டது.

கிழக்குப் பிரதேசங்களான மட்டக் களப்பு, திருகோணமலை மாவட்டங்க ளிலும் நேற்றைய ஹர்த்தாலால் இயல்புநிலை முழுமையாகப் பாதிக்கப்பட் டிருந்தது என்று அங்கிருந்து கிடைத்த தகவல்கள் தெரிவித்தன.

அப்பிரதேசங்களிலுள்ள அரச மற்றும் தனியார் நிறுவனங்கள், பாடசாலைகள் எவையும் இயங்கவில்லை. போக்குவரத் துச் சேவைகளும் இடம்பெறவில்லை என்று தகவல்கள் தெரிவித்தன. (சி)

## மோசடி...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

அவருக்கு எதிராக பல வழக்குகள் யாழ்.நீதிமன்றத்தில் பதிவு செய்யப்பட்டுள்ளன.

இந்த வழக்குகள் நேற்று விசாரணைக்கு எடுக்கப்பட்டன. சம்பந்தப்பட்ட நபர் நீதிமன்றத்தில் ஆஜர் செய்யப்படவில்லை.

பிரஸ்தாப நபரை யாழ்.நீதிமன்றத்தில் ஆஜர் செய்வதற்கு வசதியாக, அவரை விமானத்தில் அழைத்து வருவதற்கான பாதுகாப்பு அனுமதியை இன்னமும் பாதுகாப்பு அமைச்சு வழங்கவில்லை என்று சிறைச்சாலை ஆணையாளர் அறிவித்த தகவல் நீதிவானின் கவனத்துக்கு கொண்டுவரப்பட்டது.

சம்பந்தப்பட்ட நபரை வழக்கில் அடுத்த தவணையான ஓகஸ்ட் 2ஆம் திகதி நீதிமன்றத்தில் ஆஜர் செய்ய வசதியாக, பாதுகாப்பு அனுமதியை வழங்க வேண்டும் என பாதுகாப்பு அமைச்சின் செயலாளருக்கு நீதிவான் உத்தரவிட்டார்.

பிரஸ்தாப நபரின் மனைவியும் மோசடி களுடன் தொடர்பு பட்டவர் எனப் பொலி ஸார் நீதிமன்றத்தில் தெரிவித்தனர்.

அவரைக் கைது செய்து யாழ்.நீதிமன்றத்தில் ஆஜர் செய்ய ஏற்பாடு செய்யுமாறு கொழும்பு பிராந்திய சிரேஷ்ட பொலிஸ் அத்தியட்சகருக்கு நீதிவான் கட்டளை பிறப்பித்தார். (அ-1)

## பிரிட்டன்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

யப்படுத்தப்படுவதே வழமை.

இந்த நடைமுறைப் பிரகாரம் சில்லாலையைச் சேர்ந்த சுப்பிரமணியம் அலோசியஸ் யூட் என்பவரை இம் மாதம் 24ஆம் திகதி இலங்கைக்கு திருப்பி அனுப்புவதற்கு ஏற்பாடாகி இருந்தது.

அவர் இம்மாதம் 13ஆம் திகதி ஹீத்ரோ நகருக்குச் சமீபமாக உள்ள ஹார்மன் பேர்த் என்ற தடுப்பு முகாமில் வைக்கப்பட்டார்.

அவர் அன்றைய தினமே தமது உண்ணா விரதப் போராட்டத்தை ஆரம்பித்தார்.

அலோசியஸ் யூட் நேற்று மயக்க நிலையை அடைந்தார் என்று அவரது சட்டத் தரணிகள் தெரிவித்தனர். ஆனால் தடுப்பு முகாம் அதிகாரிகள் அது குறித்து எந்தத் தகவலையும் தெரிவிக்கவில்லை. பலத்த கண்காணிப்பில் வைக்கப்பட்டுள் ளார் என்று மட்டுமே கூறியிருந்தனர். அவரது உடல்நிலை மோசமாக உள்ளதாலேயே, முன்னர் நிர்ணயிக்கப்பட்டவாறு அவர் 24ஆம் திகதி நாடு கடத்தப்படவில்லை என்று அறியவந்தது.


அலோசியஸ் யூட்டுக்கு ஆதரவு தெரிவித்து ஹார்மன்பேர்க் தடுப்பு முகாமில்உள்ள ஏனைய 28 ஈழத் தமிழ் அகதிகளும் இம் மாதம் 21ஆம் திகதி உண்ணாவிரதத்தில் ஈடுபட்டனர்.

ஏனைய மூன்று தடுப்பு முகாம்களில் உள்ள ஈழத் தமிழர்கள் அதனை அறிந்து தாமும் இம் மாதம் 24ஆம் திகதி முதல் உண்ணாவிரதம் மேற்கொண்டுள்ளனர்.

இந்த உண்ணாவிர்தப் போராட்டத்தில் ஏனைய பல தடுப்பு முகாம்களில் உள்ள ஈழத் தமிழர்களும் ஈடுபடுவர் என்று அறிய வந்துள்ளது. (அ-1)

## 31ஆம் நாள் நினைவஞ்சலியும் வீட்டுக்கிருத்திய அழைப்பும்

மலர்வு 24 * 10 * 1928



உதிர்வு 26 * 06 * 2007

அமரர்

'பழமொழிச் செல்வர்'

**கனகரத்தினம் சத்தியானந்தசிவம் (J.P)**

(இளைப்பாறிய ஆசிரியர், சித்த வைத்தியர்)

மக்கள் சேவையே மகேசன் சேவை என்பதினை தன் வாழ்வில் இலக்கணமாகக் கொண்டு பல்வேறு துறைகளிலும் பணியாற்றி நாட்டுக்கும் வீட்டுக்கும் பெருமை சேர்த்து ஆனித் திங்கள் 26ஆம் திகதி தன்னுடைய வாழ்வை நிறைவு செய்து கொண்டு, எமது உள்ளங்களில் குடியிருக்கும் எங்கள் குடும்பத்தலைவர் அமரர் சச்சி மாஸ்ரரின் 31ஆம் நாள் வீட்டுக்கிருத்திய வைபவம் இன்று (26.07.2007) வியாழக் கிழமை முற்பகல் 11 மணியளவில் அன்னாரின் இல்லத்தில் நடைபெறும். இந்நிகழ்வில் கலந்து கொள்ளுமாறு அன்புடன் அழைக்கின்றோம்.

*இல.40, ஈச்சமோட்டை வீதி,*
*யாழ்ப்பாணம்.*

குடும்பத்தினர்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இப்பத்திரிகை, நியூ உதயன் பப்ளிகேஷன் (பிறைவேற்) நிறுவனத்தினரால் யாழ்ப்பாணம் கஸ்தூரியார் வீதியில் 361ஆம் இலக்கத்திலுள்ள அவர்களது பணிமனையில் 26.07.2007இல் அச்சிட்டு வெளியிடப்பெற்றது.